Registered as a news paper.

பக்கங்கள்: பதினாறு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்டுகளுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 14 (27.11.2004) சனிக்கிழமை இதழ்:58

# சிங்களக் காடையர்கள் சகிதம் ஜே.வி.பி.

# மாவீரர் நாள் நிகழ்வை குழப்ப முயற்சி!

## வன்முறையில் இறங்கியதால் திருமலையில் ஊரடங்கு; பதற்றம்



(திருகோணமலை)

திருகோணமலையில் மாவீரர்தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் ஜே.வி.பியினரின் ஏற்பாட்டில் – சிங்களக் காடையர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், நோர்வேயின் தேசியக் கொடியையும் எரித்துக் குழப்பம் விளைவித்தனர். இதனால் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுவீச்சு நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்ததுடன், நேற்று மாலை 3 மணிமுதல் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்துள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## சமய-சமூக விழாக்களாக
## தமிழ் மக்களால் கொண்டாடப்பட்ட தேசியத் தலைவரின் பிறந்த நாள்!





## இன்று தமிழீழ மாவீரர் நாள்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மண் மீட்புக்காக உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் - தமிழீழ மாவீரர்கள் இன்று தமிழர் தாயகப் பகுதிகளிலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் சிறப்புற நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் இந்தமுறை முதன் முதலாக தாயக நேரப்படி ஒரே நேரத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நேற்று முன்தினம் தொடக்கம் அனுஷ்டிக்கப்பட்டுவரும் மாவீரர் எழுச்சி நாட்களின் இறுதி நிகழ்வாக - தமிழ்த் தேசிய மாவீரர் நாள் இன்று உணர்வுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரையையடுத்து இன்று மாலை 6.05 மணியளவில் ஆலயங்களில் நினைவொலி எழுப்புதலுடன், மாவீரர் நினைவுகூரும் நிகழ்வுகள் ஆரம்பமாகும். 6.06 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்படுவர். அடுத்து முதல் மாவீரர் மரணித்த 6.07 மணிக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவச் சோதனைச் சாவடிகள்







(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தைத் தமிழ் மக்கள் இனிப்புப் பண்டங்களை வழங்கியும், பொங்கல் பொங்கியும் மகிழ்ந்து குதூகலித்தனர்.

நேற்றுக்காலை யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பிறந்தநாள் நிகழ்வுகளில் மக்கள் குதூகலத்துடனும், உற்சாகத்துடனும் ஈடுபட்டிருந்தனர். இந்து ஆலயங்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் தேசியத் தலைவருக்கு ஆயுள் வரம் வேண்டி விசேட பூசைகளையும் நடத்தினர்.

வல்வெட்டித்துறையிலுள்ள தேசியத் தலைவரின் வீடும், வீதியும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, நேற்றுக் காலை 8 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. கடற்புலிகளின் பிரமுகர் து.குகன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். அங்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உட்படப் பல பிரமுகர்கள் உரையாற்றினர்.

தொடர்ந்து நல்லூரில் - திலீபன் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்திலிருந்தும், வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்தும், பருத்தித்துறையிலிருந்தும் மரதன் ஓட்ட வீரர்களால் தலைவருக்கு வெற்றிக் கேடயங்கள் மரதன் ஓட்டம் மூலம் கொண்டுவரப்பட்டு தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் இல்லத்தில் வைத்துக் கடற்புலிகளின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சோதனைச் சாவடிகள் இன்றிரவு 11 மணி வரை திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு இன்றிரவு 11.00 மணிவரை ஏ9 வீதியிலுள்ள இராணுவ சோதனைச் சாவடிகளைத் திறப்பதற்கு இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய சோதனைச் சாவடிகளே இன்றிரவு 11 மணிவரை திறக்கப்பட்டிருக்கும்.

மாவீரர் தினம் முடிவடைந்த பின்பு பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வசதியாக குறிப்பிட்ட சோதனைச் சாவடிகளை

(16 ஆம் பக்கம் பார்க்க)




# இளைஞர் குழு தாக்குதல்; இரண்டு படையினர் காயம்!

## நுணாவிலில் நேற்றிரவு சம்பவம்

தென்மராட்சி - நுணாவிலில் நேற்றிரவு வீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரை இளைஞர்கள் சிலர் வெட்டிக் காயப்படுத்தியதாக, பலாலி படைத்தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது -

நுணாவிலில் சைக்கிள் ஒன்றில் நேற்றிரவு 7.30 மணியளவில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் இருவரை இளைஞர்கள் சிலர் வழிமறித்து கூரிய ஆயுதத்தால் வெட்டினர்.

இதனால், ஒருவர் வலது கையிலும், மற்றையவருக்கு இடது கையிலும் தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# நுணாவிலில் பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்டனர்!

நுணாவிலில் நேற்றிரவு இராணுவப் புலனாய்வைத்துறையைச் சேர்ந்த இருவர் வெட்டப்பட்ட சம்பவத்தை அடுத்து வீதியால் சென்ற பொதுமக்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டதுடன், நோயாளர்களை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வாகனமும் அடித்துச் சேதமாக்கப்பட்டது.

நேற்றிரவு படையினர் வெட்டப்பட்டதையடுத்து நுணாவில் சந்திப் பகுதியில் நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டனர்.

தடிகள் மற்றும் பொல்லுகளுடன் வந்திறங்கிய படையினரும் பொலிஸாரும் அப்பகுதியால் பயணம் செய்த பொதுமக்கள் மீது

(16 ஆம் பக்கம் பார்க்க)

இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்கு காட்சி தருகின்றன.


வே.பிரபாகரன் - தமிழீழத் தேசியத் தலைவர்


# தேசியத் தலைவரின் பிறந்த தினத்தையொட்டி மக்களின் பல்வேறு நிகழ்வுகள்!
























# தேசியத் தலைவரின் பிறந்தநாள் நிகழ்வுகள்!

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் சஞ்சிகை மற்றும் ஒலிப்பேழை வெளியீட்டு விழா நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்.வலைப்பந்தாட்ட லீக் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் - பொதுச்சுடரை மாவீரர் வீரமணியின் தந்தையார் ஏற்றினார். தேசியக்கொடியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார்.

50 ஆவது அகவையில் தேசியத் தலைவரின் சிந்தனையில் தமிழீழ விளையாட்டுத் துறை என்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவில் வாழ்த்துரையை வணபிதா ஜெயசேகரம் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் பயிற்சியாளர் ப.கிருபாகரன் நிகழ்த்தினார்

சஞ்சிகையை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியிடமிருந்து மாவீரர் வீரமணியின் தந்தை பெற்றுக்கொண்டார்.

உதைபந்தாட்டப் பயிற்சி இறுவெட்டினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா வெளியிட்டுவைக்க பங்குந்தந்தை ஜெயசேகரம் அடிகள் பெற்றுக்கொண்டார்.

கராத்தே பயிற்சி இறுவெட்டினை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி இணைப்பாளர் இளம்பிறையன் வெளியிட்டுவைக்க யாழ்.மாவட்ட கராத்தே இணைப்பாளர் சந்திரபோஸ் பெற்றுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து பாப்பா சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்வில் விளையாட்டுத்துறைத் தலைவர்கள், பயிற்சியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

☒ ☒ ☒

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாள் மற்றும் மாவீரர் நாளை முன்னிட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவிப்பொருட்களை வழங்கியதுடன், 30 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளையும் வழங்கியது.

அரியாலை மத்தி மற்றும் அரியாலை தெற்கு கிராமங்களிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஐந்து குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் உடுபுடவைகள், பாடசாலை கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் இந்தப் பகுதியிலுள்ள 300 குடும்பங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயலகத்திலும், அரியாலை உப அலுவலகத்திலும் நேற்றுக் காலை இந்த உதவிப் பொருட்களும், பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

☒ ☒ ☒

தமிழீழ தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்தநாளான நேற்று கரச்சி இந்து இளைஞர் பேரவை கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.

☒ ☒ ☒

தமிழீழ தேசியத் தலைவரின் 50ஆவது அகவையை நெடுந்தீவு மக்கள் நேற்று பெரும் உற்சாகத்துடனும் உவகையுடனும் கொண்டாடினர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் முக்கிய சந்திகள் எங்கும் தேசியத் தலைவரின் புகழ்பாடும் ஒலிபெருக்கிகள் முழங்கிய வண்ணம் இருக்க வெடியோசை வானைப்பிழக்க சிறப்பாக இடம் பெற்றது.

ஆலயங்களின் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றதுடன் முன்பள்ளி சிறார்களுக்கு இனிப்புப் பண்டங்களும் கற்றல் உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் ஞாபகார்த்த மரநடுகையும் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, நெடுந்தீவு பிரதேச அரசியற்துறையினரால் பொங்கல்' பொங்கப்பட்டு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தேசியத் தலைவரின் அகவை நாளினை முன்னிட்டு நடுந்தீவுப் பகுதியின் இளைஞர்களால் இனிப்புப் பண்டங்களும் தலைவருக்கு வாழத்துக்கூறும் கட்டவுட்டுக்களும் வைக்கப்பட்டு பெரும் உற்சாகத்துடன் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது. (13)

☒ ☒ ☒

தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த தினம் மற்றும் மாவீரர் நாளை முன்னிட்டு நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூசனி அம்மன் ஆலயத்தில் 50 பானைகள் வைத்து மக்கள் விசேட பொங்கல் பொங்கினர்.

இதேசமயம் தேசியத் தலைவருக்கு நீண்ட ஆயுளும் பலமும் வேண்டி அம்பிகைக்கு 1008 சங்காவிஷேக ஆராதனையும் இடம்பெற்றது.

அத்துடன் பல்வேறு இடங்களிலும் பிறந்த தினக் கேக்கும், இனிப்புப் பண்டங்களும் மக்களால் வழங்கப்பட்டன.

இதேசமயம் கடந்த புதன்கிழமை நயினாதீவு மாகாவித்தியாலயத்தில் நயினாதீவுப் பிரதேச மாவீரர்களது பெற்றோர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

☒ ☒ ☒

தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழர் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு இந்த வைபவம் இடம் பெற்றது. தமிழ் மாணவர் ஒன்றிய தென்மராட்சிப் பொறுப்பாளர் மதீஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலனின் சிறப்புரையும் இடம்பெற்றது. (34)

☒ ☒ ☒

யாழ்.இந்து தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தேசியத் தலைவருக்கு நல்லாசி வேண்டி கல்லூரி ஞானவரவர் ஆலயத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. அத்துடன் கல்லூரியிலுள்ள அனைத்து வகுப்பறைகளுக்கும் தலைவரின் படம் தொங்கவிடப்பட்டுள்ளது. பிறந்ததின நினைவாக கல்லூரி வளாகத்தில் மரநடுகையும் இடம்பெற்றது.

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்ததினம் தமிழ் மாணவர் ஒன்றியச் செயலகத்தில் தேசியக் கொடியேற்றி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

☒ ☒ ☒

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50 ஆவது அகவையை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரி சமூகத்தினரால் 50 அடி நீளமான வாழ்த்து மடலும் அது அடங்கிய பேழையும் தயாரிக்கப்பட்டு யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த வாழ்த்துமடலில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் தங்கள் தலைவருக்கான வாழ்த்துச் செய்தியை எழுதியுள்ளனர்.

☒ ☒ ☒

தேசியத் தலைவர் பிறந்த தினத்தை முன்னிட்டு தென்மராட்சியைச் சேர்ந்த முன்பள்ளிகள் மாணவர்களுக்கு மக்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச எழுச்சிப் பேரவைத் தலைவர் கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட 80 மாணவர்களுக்கான 500 ரூபா சேமிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. (34)

# சுமுகமான தீர்வைப் பெறுவதில் தலைவர் உறுதியாக இருக்கிறார்

## அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

(மட்டக்களப்பு)

நிரந்தர சமாதானமொன்று தோற்றுவிக்கப்படவேண்டும், எமது மக்களுக்கு விடிவைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமென்பதற்காக எமது தேசியத்தலைவர் எல்லை கடந்த பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறார். ஆனால் இன்றைய சமாதான சூழலை சீர்குலைக்கவேணடுமென்றே சிங்கள பேரினவாதம் முனைப்புக் கொண்டுள்ளது.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலிபன் தெரிவித்தார்.

காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாவீரர் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிகழ்வின் ஆரம்பத்தின் வீர முனைக்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வீ.ஆதிசுரன்மாஸ்டர் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததுடன், கடற்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இலக்கியன் மற்றும் மாவீரர்களின் பெற்றோர் ஈகச் சுடரையும் ஏற்றிவைத்தனர்.

மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

“எமது மக்களுக்கு சுமுகமான தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமென்றதில் தேசியத்தலைவர் மிகவும் உறுதியுடன் செயற்பட்டு வருகிறார்.

அதனால்தான் இன்றைய சமாதான காலத்தில்கூட நாம் 64 போராளிகளை இழந்தும், எல்லை கடந்த பொறுமையுடன் தேசியத் தலைவர் இருந்து வருகிறார்.

இவையெல்லாம் எம்மக்களுக்கு ஓர் விடிவைப் பெறுத்தருவதற்காகவேயாகும்.

இன்று சர்வதேச சமூகமும், ஏனையோரும் தேசியத்தலைவரின் மாவீரர்தின உரை - என்ன செய்தியைக் கூறப்போகிறது என்பதை எதிபார்த்த வண்ணமேயுள்ளனர்.

எமது மக்களின் விடுதலையை ஏற்படுத்துவதற்கான கருத்துக்களையும், சமாதானத்தின்பால் அவர் கொண்டுள்ள பற்றுறுதியையும் அவர் வெளிப்படுத்துவார்.

ஆனால் அரசும், பேரினவாதக் கட்சிகளும் எந்தளவுக்கு இவற்றை ஏற்குமோ, விடுமோ ,தெரியவில்லை. ஏற்றுக்கொள்வார்களானால், நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படும், மறுத்தால் அரசு இதுவரை காலமும் எமது மக்கள் மீது எப்படியான நிலைப்பாட்டைத் திணித்ததோ அதே நிலைப்பாட்டை பேரினவாத சக்திகளுக்கும், அரசுக்கும் எமது தலைமை ஏற்படுத்தும்.

சர்வதேச சமூகம் எமது விடுதலைப் போராட்டத்தை இன்று நியாயபூர்வமானதென உணரத் தொடங்கியுள்ளது.

மாவீரர்களின் தியாகமும், அவர்கள் விதைக்கப்பட்ட உரமும் விடுதலைப்போராட்டத்தை இன்று உயர்நிலைக்கு வளர்த்திருப்பதுடன், சர்வதேச சமூகத்தின் கண்களையும் திறக்கச் செய்திருக்கிறது.

இன்று அரசியல் ரீதியாகவும் பலமடைந்துள்ளோம். ஆயுத ரீதியாகவும் பலடைந்துள்ளோம்.

இந்த நிலையின் நமது தேசியத்தைச் சிதைப்பதற்கு எதிரி பல வழிகளிலும் முயற்சித்து வருகின்ற போதிலும், நமது தேசியத் தலைவரின் உறுதியான நிலைப்பாடும், மக்களின் ஒட்டுமொத்த பலமும் அதனை முறியடித்துவருகிறது.

மக்களைக் குழப்பும் சதி வேலைகளின் இலங்கை அரசு இன்று ஈடுபட்டு வருகிறது.

ஆனால், யுத்த காலத்தில் எதிரியைத் தள்ளி அடித்துவிட்டுச் சென்றவர்கள் எம்மக்களென்பதை அரசு உணரவேண்டும். எனக் கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அ.சந்திநேரு உரையாற்றுகையில் -

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரை அவர் கடைசி வரையும் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்.

அவர் சமாதானத்தை விரும்பாதவர் என்பதைக் கடந்த காலங்களில் நாம் கண்டுவந்துள்ளோம்.

அவர் யுத்தத்துக்கே ஆயத்தம் செய்கிறார். எல்லை மீறினால் யுத்தம் வரும், யுத்தம் நடந்தால் தமிழீழம் மலரும்.

தேசியத்தலைவர் பிரபாகரனின் காலத்தில் தமிழீழத்தை நிச்சயம் நாம் வென்றெடுப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பிரதேச மட்டத்துக்கு விஸ்தரிப்பு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தனது சேவைகளைப் பிரதேச மட்டத்தில் பன்முகப்படுத்தியுள்ளது.

பொது மக்கள் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக சேவைகளைப் பெறமுடியும் என, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கருணாசேன ஹெொட்டி ஆராய்ச்சி தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச காரியாலயங்களிலும் நலன்புரி அமைப்புக்கள் உருவாக்கப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின்படி, பிரதேச செயலரும், கிராம உத்தியோகத்தர்களும் புலம் பெயர்ந்த குடும்பங்களுடன் தொடர்புகளைப் பேணுவர். வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தை உரியமுறையில் பயன்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்குவர்.

## சீனாவிலிருந்து தூக்குக் கயிறு

இலங்கையில் மரணதண்டனை மீண்டும் அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தூக்குமரத்துக்குத் தேவையான கயிறுகள் இரண்டு எதிர்வரும் திங்கட்கிழமை சீனாவிலிருந்து கொண்டுவரப்படவுள்ளன. இதேவேளை - தூக்கிடும் அலுகேசுப் பதவிக்கு மேலும் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும், இவர்களது சமபளம் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார். (தே)

## நீதிபதியைக் கொலைசெய்த குற்றவாளிகள் கைது!

(கொழும்பு)

நீதிபதி அம்பேபிட்டியவைக் கொலை செய்த குற்றவாளிகள் நேற்றுமுன்தினம் பொலிஸ் உளவுத்துறையின் விசேட பிரிவால், ஆதாரங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பாதாள உலகக் கோஷ்டியின் திட்டப்படி, குறிப்பிட்ட ஒருதொகைப் பணத்துக்காக, கடற்படையிலிருந்து தப்பியோடிய ஒரு சிப்பாய் தன்னுடன் இன்னும் சிலரை சேர்த்துக்கொண்டு, இந்தத் திட்டமிட்ட கொலையைப் புரிந்தமை தெரியவந்துள்ளது.

கொழும்பு நகரின் புறநகர்ப் பகுதியான ஹல்ஸ்டோப்பில் அமைந்துள்ள மறைவிடத்தில் வைத்து, இந்த முன்னாள் கடற்படைச் சிப்பாய் கைது செய்யப்பட்டதாகவும், ஏனையவர்கள் கடுவல, கௌனிய போன்ற பகுதிகளில் வைத்துக் கைதானதாகவும் தெரியவருகிறது.

பாதாளக் கும்பலைச் சேர்ந்தவர்கள் கொடுத்த ஒப்பந்தப்படி, நீதிபதியைக் குறிப்பிட்ட வழக்கின் தீர்வு வெளியாகும் முன்னரே படுகொலை செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருந்ததாகவும், சம்பவதினம் தனது சகபாடிகளுடன் சம்பவ இடத்துக்குத் துப்பாக்கியுடன் விரைந்த முன்னாள் கடற்படைச் சிப்பாய், இந்தக் கொலையைப் புரிந்ததாகப் பொலிஸார் தரப்புத் தகவல்கள் தெரிவித்தனர்.


## கடற்படைக்கு இணையத்தளம்

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் 54 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, இணையத்தளம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியால் என்ற இந்த இணையத்தளம் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இந்த இணையத்தளத்தில் கடற்படைவிபரங்கள், பாதுகாப்புச் செய்திகள் கடற்படையின் ஆட்சேர்ப்புக்கள், பற்றிய விபரங்கள், விளையாட்டுச் செய்திகள், கோரிக்கை மனுக்கள் போன்றவற்றைப் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)



மாவீரர் நினைவு மண்டபம்



கடற்படைத் தள மாதிரி



விமானப்படைத் தள மாதிரி

## போரியல் வரலாற்று கண்காட்சி மூதூரில் திறந்துவைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் மகாவித்தியாலய மைதானத்தில் மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகளும், விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றுக் கண்காட்சியும் நேற்று முன்தினம் காலை ஆரம்பமானது.

விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றுக் கண்காட்சியில் - மாதிரி விமானத்தளம், மாதிரி கடற்படைத்தளம் என்பன இடம் பெற்றிருந்தன. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை திருகோணமலை துணைத் தளபதி வசந்தன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை கிழக்குப் பிராந்தியக் கடற்புலிகளின் தளபதி சிறிராம் ஏற்றிவைத்தார்.

முதல் மாவீரர் லெப்.சங்கரின் திருவுருவப்படத்துக்கு கடற்புலிகளின் மகளிர் படையணியைச் சேர்ந்த மங்கேஸ் ஈகைச்சுடரை ஏற்ற, விடுதலைப் புலிகளின் மூதூர் பகுதி இராணுவத் தளபதி குஞ்சன் மலர்மாலை அணிவித்தார். சம்பூர் மகாவித்தியாலய மண்டபத்தில் மாவீரர்களின் உருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மாவீரர்களுக்குப் பெருந்தொகையான மக்கள் அஞ்சலி செலுத்தி வருவதுடன், போரியல் வரலாற்றுக் கண்காட்சியும் பார்வையிட்டு வருகின்றனர். (04,10)

## மன்னார் சம்பவங்களைக் கண்டித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம்

மன்னாரில் மாவீரர்தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையில், மக்கள் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தைக் கண்டித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம பிற்பகல் 3.30 மணியளவில் நாடாளுமன்றத்தின் மத்திய பகுதிக்குச் சென்று எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தினர்.

நேற்றுமுன்தினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றின் மத்திய பகுதிக்குச் சென்று, மன்னார்ப் பகுதியில் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து உரிய விசாரணையை உடனடியாக நடத்தப்படவேண்டுமெனக் கோரி, நாடாளுமன்றத்தை நடத்தவிடாது எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் நாடாளுமன்றத்தின் வழமையான நடவடிக்கைகள் பாதிப்படைந்ததுடன், நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையும் ஏற்பட்டது.

இதன் பின்னர் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் பேச்சுக்களை நடத்தினர்.

இதன்போது, வல்வெட்டித்துறைச் சம்பவம் போன்று படையினர் - மன்னாரில் மக்கள் மீது மீண்டுமொருமுறை தாக்குதலை நடத்தியுள்ளனர். எனவே, இவ்வாறான தாக்குதல்கள் இனிமேலும் நடைபெறமாட்டாதென அமைச்சர் ஒருவர் உத்தரவாதம் தரவேண்டும்.

அத்துடன், மன்னாரில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க குழுவொன்றை அமைக்க வேண்டும். தற்போது அவசரகாலச் சட்டமோ, பயங்கரவாதச் சட்டமோ இல்லை.

ஆனால், படையினர் தமது வழமையான பணியை விடுத்து, மக்கள் மீதான தாக்குதலை மேற்கொள்கின்றனர். எனவே படையினர் தமக்குரிய வழமையான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

இவை தொடர்பாக இராணுவத் தளபதிகள், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை இன்று காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சந்தித்துக் கதைப்பதற்கு ஒழுங்கு செய்துதரவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் தெரிவித்த போதிலும், இதற்கான இணக்கப்பாடு எதுவும் ஏற்படவில்லை. இதனால் சபையை ஒத்திவைப்பதாகச் சபாநாயகர் அறிவித்தார்.

## திருக்குறள் மனனப்போட்டி பரிசளிப்பு விழா வேம்படியில்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் யாழ்.கல்வி வலய தமிழ்த்துறை அனுசரணையுடன் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் விழா வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ் மாவட்டத்தில் அதிகூடிய சாதனை செய்த கல்வி, விளையாட்டு, தமிழ்த்தின போட்டி புலமைப்பரிசில், விவசாயம், சமூகவியல் விஞ்ஞானம் துறை சார்ந்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளதாகவும் -

இந்த நிகழ்வுக்கு பேராசிரியர்களும், சான்றோர்களும் பங்குபற்றி சிறப்பிக்க உள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## மகா சங்கம் அமைக்க அனுமதி

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கெனத் தனியான சமுர்த்தி மகா சங்கம் ஒன்றை அமைப்பதற்கான அனுமதி சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ளதால் அதற்குரிய நிறைவேற்றுக்குழுவை தெரிவு செய்வதற்கான பொதுச் சபைக் கூட்டம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது தேசிய வறுமை ஒழிப்பு திட்டமாகையில் நல்லூர் பிரிவுக்குட்பட்ட சகல சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொண்டு மகா சங்கம் அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் கோரிக்கை விடுத்துள்ளார். (63)

## கல்வியியற் கல்லூரியில் மாவீரர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு மாவீரர் தின நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. பொதுச்சுடரை சத்தியேந்திரம்பிள்ளை ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். முதல் மாவீரர் சங்கரின் திருவுருவப்படத்துக்கு கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி பா.தனபாலன் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலர் வணக்கமும் நினைவுரைகளும் இடம்பெற்றன.

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக சுமார் 23 லட்சம் ரூபாவை செலவிட மாவட்ட திட்டமிடல் அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது.

முதற் கட்டமாக 14 வேலைத் திட்டங்களுக்கு 7 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் கட்டமாக 15 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (63)

# நல்லூர் பிரதேசசபை

## இறைச்சிக்கடைகள் / சந்தைக்கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் 01

**01.01.2005ம் திகதி முதல் 31.12.2005ம் திகதி வரையான காலப்பகுதிக்கு பின்வரும் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றது.**

| இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற் தவிர்ந்த) |
|---|---|---|---|
| கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 01. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 181728.00 |
| 02. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 71500.00 |
| 03. கோண்டாவில் வடக்கு அரசடிவீதி மீன்சந்தை | 200.00 | 500.00 | 1000.00 |

01.01.2005ம் திகதி முதல் பின்வரும் சந்தைக் கடைகளை வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள்

| கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கிரயத்தொகை (வற் தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| திருநெல்வேலிச் சந்தை மேல்மாடிக்கடை இல.06 | 500.00 | 10000.00 | 108000.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| ஞானபண்டித வித்தியாசாலை வீதி பழைய மீன்சந்தை கொட்டகைக்கடை. | 500.00 | 1000.00 | 360000.00 |

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 03.12.2004 வெள்ளி 12.00 மணிவரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி - 06.12.2004 திங்கள் 10.00 மணிவரை.
கேள்வி திறக்கும் திகதி - 06.12.2004 திங்கள் பி.ப. 2.00 மணி.

கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை காரியாலய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை.
திருநெல்வேலி.
25.11.2004.

(C/3410)

பொன்னையா வைரமுத்து
செயலாளர்.
நல்லூர் பிரதேசசபை.



# மாவீரனே!

அன்று நீ சிந்திய குருதியின் அர்த்தம்
இன்று செவிகளுக்குள் பட படக்கின்றன.
இன்றும் விதையாகி மண்ணில் உறங்கும் - உன்
சிறகுகளில் ஒன்றைப் பெற்றிருப்பேன்
நான் வானத்தை உரசி வானவில்லை (த்)
தொடவேண்டும் முடியுமானால் -உன்
வீரத்தில் கொஞ்சத்தை எனக்குத்தா-மாவீரனே
நாம் சுதந்திரமென்ற சொல்லை சுகமாக
உச்சரிக்கவேண்டும் என்பதற்காய்- நீங்கள்
காலத்தில் கல்லறையில் உறங்கிக்கொண்டு இருக்கிறீரே!
கார்த்திகை மலர்கள் எல்லாம் உமக்காகவே
மலர்கின்றன மாவீரரே!
மலர்போன்ற மென்மையான உள்ளம்
படைத்த உங்களை மலர் தூவி வழிபடும் அந்நாளே
கார்த்திகை 27 மாவீரரே!

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

(C/3404)

# தமிழினத்தையும் தமிழ் தேசத்தையும் நேசித்த மாவீரர்களை நாம் போற்றுதல் வேண்டும்!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி



(யாழ்ப்பாணம்)

**மண்ணில் மனிதர்கள் பிறக்கின்றனர். இறக்கின்றனர். சிலர் பிறக்கின்றார்கள் ஆனால் இறப்பதில்லை. மண்ணில், ஊரில், பிறரில், தேசியத்தில் அக்கறை கொண்டவர்கள் இறந்துவிடுவதில்லை. அவர்கள்தான் மரியாதைக்குரிய மாவீரர்கள். சாவுக்கு அஞ்சுகின்றபோது, சாவையே சாகடித்து, தன்னுயிரை மறந்து மண்ணுயிரைக் காக்கும் மான மாவீரர்கள் இவர்கள்.**

**இன்று தமிழினத்தை, தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தி இந்தப் போராட்டத்தில் ஆகுதியாகிவிட்ட வீரர்கள் இன்னமும் சாகவும் இல்லை. சாகடிக்கப்படவும் இல்லை. இந்த மாவீரர்கள் என்றும் எம் நினைவுகளால் பூசிக்கப்படவேண்டியவர்கள். இந்த வீரர்களை இந்த நாளில் பெற்றோர்கள் கௌரவிக்க வேண்டிய ஓர் முக்கிய நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம் என, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இளம்பரிதி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

முதன்முதலில் 1989 ஆம் ஆண்டு மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டபோது தாயக மக்கள் அனைவரும் இவர்களைப் பூசிக்கவேண்டும் என எமது தலைவர் விரும்பினார்.

அதேபோன்று இன்று தமிழர் தாயகம் மட்டுமன்றி, தமிழ் பேசும் மக்கள் வாழும் புலம்பெயர்ந்த நாடுகளில்கூட இன்று உணர்வுபூர்வமாக பூசிக்கப்பட்டுவருகின்ற நாளாகவே இந்த நாள் இருக்கிறது.

பிறப்பின் பெருமை பெறவேண்டும் எனத் துடிக்கின்றவர்கள் மத்தியில் பிறப்பின் பெருமையைப் பெற்றவர்களாக இன்று மாவீரர்கள் இருக்கின்றனர். இதனால்தான் மாவீரர் பெற்றோர் கௌரவிக்கப்படுகிறார்கள், மதிப்புக்குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இன்றைய சமுதாயத்திலே நீங்கள் மற்றவர்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்பதனையே உங்களுடைய பிள்ளைகள்; சகோதரர்கள் விரும்பினார்கள்.

இதனால்தான் அவர்கள் தங்களை மறந்து, தலைமையின் கட்டளையை ஏற்று சாவுக்குத் துணிந்தார்கள். அவர்கள் எண்ணங்கள் நிச்சயமாக நிறைவேறும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

வழமையான காலங்களில் நேரடியாக வந்து உங்களிடம் உரையாடினார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையின் காரணமாக வந்து போக முடியாத நிலை உருவாகியிருக்கின்றது.

ஆனால் மிகவிரைவில் எமது போராளிகள் உங்கள் இல்லங்களுக்கு வருவார்கள். உங்களிடம் பேசுவார்கள். உமது எண்ணங்கள், ஆசைகள், உணர்ச்சிகளை தேசியத் தலைவரிடம் கொண்டுசெல்வார்கள். இதுவே தேசியத் தலைவரின் விருப்பமாக இருக்கின்றது.

இன்று எமது மாவீரர்களின் விருப்பு தமிழ் என்ற இனம் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் வாழ வேண்டும் என்பது அவர்களின் முழுமைய எண்ணங்கள் ஆகும். அது நிறைவேறும் பாதையில் நாம் நடந்து கொண்டிருக்கிறோம்.

அவர்களின் இலட்சியம் ஒன்றாகவே இருக்கும். ஆனால் அது அடையப்படுகின்ற வழிகள்தான் வேறாக இருக்கலாம். அப்பொழுது நாம் எந்த இழப்புக்களுமின்றி வெற்றியைப் பெற்றுவிடலாம்.

அந்த வகையிலேதான் எமது தலைவர் ஒரு நுணுக்கமான இராஜதந்திர முறையான தீர்வை எட்ட இருக்கின்றார்.

இந்த மாவீரர்களின் தியாகத்தால்தான் இன்று நாம் ஓர் பலமான இராணுவக் கட்டமைப்பைப் பெற்றிருக்கிறோம்.

இந்த பலமான இராணுவக் கட்டமைப்பு காரணமாகத்தான், இன்று எம்முடன் சமாதானம் என்ற பேச்சுக்கு சிங்கள தேசம் முன்வந்திருக்கின்றது. ஆனாலும் எமது மக்களின் அடிப்படைத் தேவைகள், அபிலாஷைகள் என்பவற்றை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் எமக்குக் கிடைக்கவில்லை.

இந்த நிலையில்தான், இடைக்கால அதிகார தன்னாட்சி வரைபு ஒன்றை சமர்ப் பித்திருக்கிறோம். அதன்படியான ஓர் சாதகமான தீர்வு கிடைக்கப்படவேண்டும்.

கடந்த காலங்களைவிட எமது இயக்கம் ஓர் அதிகாரம் பெற்ற விடுதலை இயக்கமாக இருக்கின்றது. எனவே உங்களுடைய செயற்பாடுகள் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

எமது உண்மை நிலை உணர்த்தப்படுகின்ற வேளையில், அவற்றுக்கான சர்வதேச உதவிகள் நிறுத்தப்படுகின்றன என்பதை நாம் உணரவேண்டும். எனவே சர்வதேச உதவி இன்றி வாழமுடியாத நிலை உருவாகியது.

எமது தலைவர் முதலில் ஆயுதம் ஏந்தும்போது எந்த நிலையில் இருந்தாரோ, முதல் மாவீரர் அவர் மடியில் வீழும்போது எந்த முடிவில் இருந்தாரோ - இன்று 17,780 மாவீரர்களை இழந்த நிலையிலும் அதே முடிவில்தான் இன்றும் எமது தலைவர் இருக்கின்றார். அதில் எத்தகைய மாற்றமும் இல்லை.

இந்த நிலையில்தான் எமது தேசியத் தலைவர் ஒன்றை சொல்ல விரும்பினார். இன்றைய காலகட்டத்தில் எந்தக் குடும்பம் கூடியளவு பங்களிப்பை வழங்குகின்றதோ, அந்தக் குடும்பமே சுதந்திர தாயகம் மலர்கின்றபோது தேசியத் கொடியை ஏந்தும் உரிமையைப் பெறும் எனக் கூறினார்.

உங்கள் பிள்ளைகள் செய்த தியாகத்தால் எமது இனம் மக்கள் அடைகின்ற வெற்றியை பார்க்கும்போதுதான், உமது பிள்ளைகள் செய்த தியாகம் உமது மனங்களில் இருந்து விட்டு விலகும் என்றார்.

திராவிடர்களுடைய பண்பாட்டு விழுமியங்களை பார்க்கின்றபொழுது அவர்கள் வீரர்களுக்கு வணக்கம் செலுத்திய நிலையை நாம் காணக் கூடியதாக உள்ளது. ஆனால் இன்று எம்மக்களும் எமது வீரர்கள் துயிலுகின்ற இல்லங்கள் சென்று வழிபாடு செய்வதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

தமிழன் என்பவன் வீரத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவன் என்பதனை நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இந்த மண்ணில் பிறந்ததற்கு நாம் பெருமைப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கிழக்கு ஜே/271 கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள பன்னாலை கிராமம், மிதிவெடிகள் அகற்றப்பட்ட நிலையில் கோப்பாய் பிரதேச செயலரிடம் மிதிவெடி அகற்றிய மனித நேய அமைப்புக்களால் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, மிக விரைவில் உரும்பிராய் வடக்கில் உள்ள தற்போது மிதிவெடி அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பிரதேசமும், கோப்பாய் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளது. (90)

### மாபிள் பதிப்பதற்கான பயிற்சிப் பட்டறை

டிசம்பர் மாதம் 2,3 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ்ப்பாணக் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில், மேசன்மார்களுக்கு விரிவுரையும், செயல்முறைப்பயிற்சியும் இலவசமாக வழங்கப்பட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் கலந்துகொள்ள விரும்பும் மேசன்மார்கள் தமது பெயரை கடற்கரை வீதியிலுள்ள மாகாண கட்டடங்கள், திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் நேரில் வருகைதந்து பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இந்தப் பயிற்சிகளில் கலந்துகொள்பவர்களுக்கு, உணவு வசதிகளும் வழங்கப்படும். பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும். மேலும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### கோப்பாயில் பாதீனியம் பரம்பல்

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பாதீனியம் விரைவாகப் பரவிவருவதால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புறும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொது இடங்களில் காணப்படும் பாதீனியங்களை சம்மேளத்தினர் மற்றும் விவசாய சேவை தொடர்பான அமைப்புக்கள் அகற்றி வருகின்றன.

தனியாருக்குச் சொந்தமான காணிகளில் பாதீனியம் பரவுவதைக் காணி உரிமையாளர்கள் இனங்காணும் பட்சத்தில், காணி உரிமையாளர்களால் உடன் அகற்றி விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (90)

### ஹோட்டேல் பாடசாலை மூடப்பட்டது

இலங்கை உல்லாசப் பயணச் சபையால் யாழ். மணியம் கட்டடத் தொகுதியில் நடத்தப்பட்டு வந்த ஹோட்டேல் பாடசாலை கடந்த 19 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றியோருக்கு வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுடன், தளபாடங்களும் அனுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இங்கு பயின்று கொண்டிருந்த 14 பேர் இடைநிறுத்தப்பட்டு, விடுதிகளில் வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. இதன் மூடுவிழாவிற்கென தெற்கிலிருந்து உயர் அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வாரம் யாழ். வந்திருந்தது.

அனுர பண்டாரநாயக்கவின் அமைச்சின் கீழ் வரும் இந்தப் பாடசாலை மூடுவிழாவானது அரசியல் பழிவாங்கலாக இருககலாம் என மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (111)

## தெங்கு உற்பத்தியாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் கடந்த கால யுத்த நடவடிக்கைகள் காரணமாக பல லட்சம் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டன.

இதன் காரணமாக தென்னைச் செய்கையாளர்கள் மட்டுமன்றி, இதனோடு சம்பந்தப்பட்ட பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னையில் இருந்து பகுதிகளாகப் பெறப்படும் ஓலை, தேங்காய், தேங்காய்மட்டை, போன்றவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு தொழில் செய்யும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை தென்னைச் செய்கையாளருக்கோ அன்றி அது சார்ந்த தொழிலாளர்களுக்கோ இன்னும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

இது குறித்து வடமாகாணத் தெங்கு உற்பத்தியாளர் சங்கம் சம்பந்தப்பட்ட பலருக்கு முறையிட்டும் பலனேதும் கிட்டவில்லை.

இது குறித்து இலங்கை தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினரால் மனித உரிமை ஆணைக்குழு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலருக்கும் முறையிடப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை சம்பந்தப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை. இதனால் மிகவும் மனமுடைந்துள்ள வட மாகாண தெங்குச் செய்கையாளர்களும், அதனோடு தொடர்புபட்ட தொழிலாளர்களும் தமக்குரிய நட்டஈடு விரைவில் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

அத்துடன், இவர்களுக்குரிய நட்டஈட்டை விரைவில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளில் வட மாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்கம் ஈடுபட்டுள்ளது. (த)

## பிறப்பு - இறப்பு சான்றிதழ் பெறுவதற்கு இலகுமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பிறப்பு - இறப்பு சான்றிதழின் பிரதிகளைப் பெற இலகு முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பிறப்பு - இறப்பு சான்றிதழ் பெறுவதற்காக மக்கள் மாவட்ட பதிவாளர் அலுவலகத்துக்கு செல்வதால் வீண்சிரமமும், காலதாமதமும் ஏற்படுகிறது.

இதனைக் கருத்திற்கொண்டே- இந்தப் புதிய இலகு நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் கருத்துத் தெரிவிக்கையில் -

இனி மேல் பிறப்பு - இறப்பு சான்றிதழ் பெற விரும்புவோர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டும் என்ற அவசியம் இல்லை.

தேவையான விபரங்களை எழுதி, பத்து ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி மாவட்ட பதிவாளர் அலுவல்கததுக்கு அனுப்பினால் - விரைவாக அவர்களுக்குரிய சான்றிதழ்கள் அவர்களுடைய முகவரிக்கே அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இது பற்றியோ அல்லது ஏனைய தகவல்களோ பெற விரும்புபவர்கள் உதவிப்பதிவாளர் நாயகம் வடக்கு வலயம், கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்புகொண்டு விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். (த)

### றீடோ நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

தேசியத் தலைவர் பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட றீடோ நிறுவனத்தினரால் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

றீடோ நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுழாவடி அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் சி.நாகையா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதில் பெற்றார் வீட்டு கல்வி பயனாளிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (44)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
ஐந்தாவது அகவையில்



பெயர் : இ.பிரஹவி
முகவரி : 'யோக நிழல்' அல்வாய் மேற்கு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

## மாவீரர் நாள் நவம்பர் 27 - 2004

ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை? என்று கேட்டார் உணர்ச்சிக் கவிஞர். அவரைக் கேலி செய்தவர்கள் ஆளப்போகிறார்களாம்! யாரை ஆளப்போகிறார்கள்? என்று கேட்டனர். ஒருமுறை தான் ஆள ஆசையாயிருக்கின்றதோ என்று ஏளனம் செய்தவர்களும் இருந்தார்கள். ஆனால், கவிஞர் ஒரு கனவு கண்டார்.

**மறவர் படை தான் தமிழ்ப் படை -குல**
**மானம் ஒன்று தான் அடிப்படை**
**வெறிகொள் தமிழர் புலிப்படை - அவர்**
**வெல்வார் என்பது வெளிப்படை.**

என்பது தான் அவரது கனவு. அவர் பாடிய பொழுது புலிப்படை இருக்கவில்லை. ஆனால்

# மரணத்திலும் வாழும் மாவீரர்கள்

சிலம்பு




கவிஞர், தமிழ் மக்களுக்கு மானம் தான் பெரிது. குலமானத்தைக் காக்க வெறிகொண்டு, புலிப் படையாக எழுவார்கள், வெல்வார்கள் என்று கனவுகண்டார். அவரது கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளாகக் காட்சி தருகின்றனர். அவர்களது வீரமிகு போராட்டம் விடுதலையை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தி, வெற்றியின் வாசல் வரை கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

இந்த விடியலை நோக்கிய வெற்றிக்கு உரமாகத் திகழ்பவர்கள் தான் மாவீரர்கள்.

தமிழனின் வீரத்தை எங்கே காணலாம் என்று கேட்டால், புறநானூற்றிலே காணலாம் என்பார்கள். ஈட்டியும், வாளும் கொண்டு பொருதிய காலம் அது. அங்கே நடந்த போர்கள் மன்னர்களுக்கிடையேயான போர்களாக இருக்கும். குறுநில மன்னர்களின் மேலான போராக இருக்கும். அதிலே புறமுதுகு காட்டாத சிறுவனைப் பற்றிய வீரம் காணப்படும். "என் மகன் கோழையல்ல, என் வயிற்றில் பிறந்தவன், அங்கே போர்க்களத்தில் தோன்றுவான்" என்ற வீரத் தாயின் உணர்வு இருக்கும். ஆனால், நாம் காணும் மாவீரர்கள் புறநானூற்று வீரத்தை விஞ்சி நிற்பவர்கள். விடுதலையை வேண்டி நிற்கும் இனத்திற்காய் வித்தாகப்போன மாவீரர்கள். எமது மண்ணிலே அந்நியர் காலடி வைத்து, எமது ஆட்சியைக் கைப்பற்றிய பொழுது வீரப் போர் புரிந்த பண்டார வன்னியனையும், சங் கிலியனையும் தமிழ் மண் அறியும். அவர்களது வீரப் போராட்டம், - காட்டிக் கொடுப்போரால் தோற்றுப் போனது தான் வரலாறு. அதனால் தமிழ்மண் அந்நியர் ஆட்சிக்குட்பட்டது. 1948 இல் வெள்ளையர் வெளியேறிய பொழுது 'எமது ஆட்சியை எம்மிடமே தந்து விட்டுச்செல்' என்று கேட்கக் கூடிய தமிழ்த் தலைமை இல்லாமற் போய்விட்டது. தொலை நோக்குப் பார்வையற்ற தலைமையும், 450 ஆண்டுகளாக அந்நியராட்சிக்குள் வாழ்ந்ததால், விடுதலைச் சிந்தனை மங்கியிருந்த தலைமையும் தமது ஆட்சியைக் கேட்காது, சிங்களத்தின் ஆட்சிக்குள் தமிழினத்தை உட்படுத்திவிட்டது. அந்நியர் வெளியேறியதால், எமது நாடு சிங்களத்தின் ஆட்சிக்குட்பட்டதேயன்றி, சிங்களம் - தமிழினத்தைப் போரில் வென்று, ஆட்சியைக் கைப்பற்றியது இல்லை. அதாவது தமிழ் மக்கள் தங்கள் இறைமையை எச்சந்தர்ப்பத்திலும் சிங்களத்திடம் இழந்து விடவில்லை. எனவே தான் படிப்படியாகச் சிங்களம் தன் உண்மைத் தோற்றத்தைக் காட்டிய பொழுது, தமிழ் மக்கள் தங்கள் இறைமையைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டார்கள். அதன் வளர்ச்சி தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றமும், வளர்ச்சியுமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் மாவீரன் சத்தியநாதன் தொடக்கம் இன்று வரை 17 ஆயிரம் வரையான போராளிகள் மாவீரர்களாகியுள்ளனர். ஏன் இத்தனை இளைஞர்கள் போராளிகளாக மாறினார்கள்? ஏன் மாவீரர்கள் ஆனார்கள்? என்பது சிந்திக்கவைக்கும் கேள்வியாகவுள்ளது. நாட்டிலே மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், முகாமைத்துவ உயர் அதிகாரிகளாகவும், கணக்காளர்களாகவும் வர வேண்டும் என்று பலர் சிந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கையில், புலி வீரர்களாக ஏன் இந்த இளைஞர்கள் மாறினர்கள்? பெரிய படிப்பு, பட்டங்களில் இவர்களுக்கு வேட்கை இல்லையா? எப்படியும் வாழலாம் என்றில்லாமல் மானத்தோடு வாழ வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம் ஏன் ஏற்பட்டது? எமது நாடு, எமது மண் எமக்கு வேண்டும், எமது தாய்த் தமிழ் மொழிகாக்கப் படவேண்டும் என்ற சிந்தனை இவர்களிடம் விடிவை நோக்கிப் பரணிபாடிய தலைவரின் தூய்மையும் செயற் பாடும் இந்த இளைஞர்களை வழிகாட்டி அழைத்த மையே இதற்கான காரணமாகக் கொள்ளலாம்.

தாய்த் தமிழக மண்ணிலே விழுப்புண் பெற்ற முதல் மாவீரர் தமிழகத்திலே தலைவரின் மடியிலே தனது வீரச்சாவைத் தழுவிக்கொள்கிறார். அதனை அவர் பெரும் பேறாக நினைத்து, மீளாத்துயில் கொள்கின்றார். அதன் பின்னர் எத்தனையோ விதமான வகைகளிலே போராட்டம் வளர்ச்சி பெறுகிறது. போராட்டம் வளர்ச்சியடைந்து, வளர்ந்து வர வர மாவீரர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

கரந்தடி (கெரில்லாப் போராட்டம்) படையாக இருந்த போராட்டம் மரபு வழியுத்தமாக மாறியது. போர்த் தந்திரோபாயம் வலுப்பெற்று, உலகம் வியக்கும் வண்ணம் இன்று முன்னிலையில் உள்ளது. இதற்கு மாவீரர்களின் ஈகமே முதன்மைக் காரணமாக அமைகிறது. இவ்வாறு தற்கொடையாளிகளாகிய மாவீரர்களுக்குத் தமிழீழத்திலே தனி இடம் கொடுக்கப்பட்டது. அவைதான் மாவீரர் துயிலும் இல்லங்கள். வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்கள், மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைக்கப்படவில்லை மாறாக அவை விதைக்கப்பட்டன. ஆம் விடுதலைப்பயிர் அங்கே விதைக்கப்பட்டது. இதனை யார் விளங்கிக் கொண்டார்களோ தெரியாது. ஆனால், சிங்கள அரசும், சிங்கள இராணுவமும் நன்கு புரிந்து கொண்டது. மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்தால், விடுதலைப்பயிரை அழித்து விடலாம் என்று நினைத்தது அது. தமிழ் மன்னன் எல்லாளனைச் சூழ்ச்சியால் வென்ற சிங்கள மன்னன் துட்டகைமுனு, தனது வெற்றியின் பின்னர் எல்லாளனுக்கு நடுகல் நட்டு, அவனுக்கு மரியாதை கொடுத்தான். அந்த நடுகல் உள்ள இடத்தால் பயணிப்பவர்கள் அவ்விடத்தில் இறங்கி மரியாதை செய்யுமாறும் பணித்திருந்தான். இவ்வாறு இறந்து எல்லாள மன்னனுக்கு மரியாதை செய்ததை வரலாறு கூறும். ஆனால், கைமுனு வழி வந்ததாகக் கூறும் சிங்கள அரசு - மாவீரர்களின் துயிலும் இல்லங்களை உடைத்தெறிந்து, நாசம் செய்து தனது காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டி நின்றது. நூலகங்களை அழித்தது, பண்பாட்டுச் சின்னங்களை அழித்தது, வரலாற்றைத் திரிபுபடுத்தியது. ஈற்றில் மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்தது.

1995 இல் மக்கள் வெளியேறிய பொழுது - மாவீரர் துயிலும் இல்லங்கள் சிங்கள இராணுவத்தினரிடம் சிக்கியது. பின்னர் முழுக்குடா நாட்டையும் சிங்கள இராணுவம் ஆக்கி ரமித்தது. அப்பொழுது தான் யுத்த டாங்கிகளாலும், புல்டோசர்களாலும் மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. மாவீர் துயிலும் இல்லங்கள் உயிர்ப்பு உள்ளவை. இவை தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டும் அம்புக்குறிகளாக இருக்கும். இவற்றை விட்டுவைக்கக் கூடாது என்று சிங்கள அரசும், இராணுவமும் நினைத்தன, அழித்தன. ஆனால், அந்த வில்லங்கள் அழிக்கப்பட முடியாதவை. அழிக்க அழிக்க, மேலும் மேலும் அழகாகவும், உயிர்ப்பாகவும் விடுதலைப் பயிரை வளர்ப்போம் என்று மாவீரர் துயிலும் இல்லங்கள் புதிய வடிவம் பெற்று நிற்கின்றன. பீனிக்ஸ் பறவைகள் எரிந்த சாம்பரிலிருந்து மீண்டும் தோன்றுவதாகக் கூறுவர். அது எத்தனை தூரம் நம்பக் கூடியதாக உள்ளதோ என்பது கேள்விக்குரியதல்ல. ஆனால், மாவீரர்களின் துயிலும் இல்லங்களிலிருந்து விடுதலைப் பயிர் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் உண்மையாகும். மாவீரர் துயிலும் இல்லங்கள் இன்று புதுப்பொலிவுடன், புதுஉணர்வுடன் எழுந்து நிற்கின்றன. எங்கே தமிழ் மக்கள் ஒன்று கூடித் தமது விடுதலைச் சுடரை ஏற்றுகின்றார்களோ, அவற்றை அழித்து விட முனைந்தது சிங்களம். ஆனால், அந்தத் தடை நொருங்கி விட்டது. தமிழ் மக்களின் தேசிய நாளாக நினைத்து, மாவீரர் நாளில் மக்கள் அந்த இல்லங்களிலே கூடுகிறார்கள். உறவு உரித்துள்ளவர்கள் மட்டுமல்ல, அனைத்து மக்களும் மாவீரர்களைத் தமது உறவு என்று எண்ணியபடி அங்கு கூடுகிறார்கள். மாவீரர் துயிலும் இல்லப் பாடல் வரிகள் அவர்கள் எல்லோரையும் மெய்மறக்கச் செய்கின்றன. வழிந் தோடும் கண்ணீரால், வித்தாக விதைக்கப்பட்ட மாவீரர்களுக்கு நீர் பாய்ச்சுகிறார்கள். விடுதலைப் பயிர் ஓங்கி வளர்கின்றது.




நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்; அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

இதனை முழு உலகமும் இன்று உணரத் தொடங்கியுள்ளது. பயங்கரவாதிகள் அல்ல இவர்கள் மாவீரர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மாவீரர் நினைவாகத் தமிழ்த் தேசியத் தலைவர் ஆற்றும் உரை உலகத்தை ஈர்த்துக் கொண்டிருக்கும். மாவீரர்களுக்கு தலைவர் எத்தகைய மதிப்புக் கொடுத்துள்ளார் என்பது இந்தநாள் உரையின் மகத்துவமாகும். உலகத்துக்குத் தமிழினத்தின் நிலையை எடுத்துக் காட்டும் உரையை மாவீரர் நாளில் நிகழ்த்துவது உலக வரலாற்றில் வேறு எவரும் காணமுடியாத நிகழ்வாகும்.

"கோழைகள் எப்பொழுதும் செத்துக்கொண்டிருப்பார்கள், வீரர்களுக்குச் சாவு ஒருமுறை தான் வரும் என்பார்கள். ஆனால், மாவீரர்களுக்குச் சாவே இல்லை. அவர்கள் தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். விடுதலைப் பயிரை வளர்த்துக்கொண்டேயிருக்கின்றார்கள்"

அடுத்த மாவீரர் நினைவு நாளை முழுமையாக விடுதலை பெற்ற தமிழீழத்தில் தமிழ்த் தேசிய நாளாக நினைவு கூர்வோமாக.

# மாவீரர் நாள் நவம்பர் 27 - 2004



மாவீரர் நாள் மண்ணின் மைந்தர்களின் புகழ்பேசும் மகத்தான திருநாள். மக்களின் சொத்தாகிவிட்ட மாவீரர்களின் தியாகங்களைக் கௌரவிக்கும் பொன் னாள். இந்த நாள்போல் ஒரு பொன்னாள் இனிவருமோ எனச் சுடரேற்றி வணங்கும் நாள். ஒரு உயர்ந்த இலட்சியத்துக்காக மக்கள் யாவரும் மாவீரர்கள் துயிலும் புனித இல்லங்களில் தீபாராதனை செய்யும் தியாகத் திருநாள். மாவீரர்களின் மகா தியாகம் பற்றித் தேசியத் தலைவர் ஒருமுறை பின்வரு மாறு குறிப்பிட்டார்.

"நீங்காத நினைவுகளாக எம்மோடு ஒன்றிக் கலந்துவிட்ட உணர்வுகளாக, காலத்தால் சாகாது, என்றும் எம்முடன் உயிர் வாழும் இந்த மாவீரர்களைக் கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கிறது. மாவீரர் நினைவாக ஈகச் சுடரை ஏற்றும்பொழுது, அந்த எரியும் சுடரில் அந்தத் தீ நாக்குகளின் அபூர்வ நடனத்தில், அந்த அற்புதமான படிமத்தில் நான் ஒரு தரிசனத்தைக் காண்கின்றேன். அக்கினியாகப் பிரகாசித்தபடி ஆயிரமாயிரம் மனித தீபங்கள் நெருப்பு நதிபோல ஒளிகாட்டி, வழிகாட்டிச் செல்லும் ஒரு அதிசயக் காட்சி தடீரென மனத்

ஞர்களை வழிநடத்தி, வியட்னாம் போரை வென்றெடுத்த ஜெனரல் கியாப் பின்வருமாறு வர்ணிக்கிறார். "ஒரு போராளியானவன் மக்களிடையேயான பிரச்சினைகளைப் படித்தறிய ஆர்வமுடைய மாணவனாகவும், அந் தப் பிரச்சினைகளை ஒழு ங்குபடஎடுத்துப் போதிப்பதில் நல்லாசிரியனாகவும், இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கி வழிநடத்துவதில் வழிகாட்டியாகவும், இந்த வழியில் ஏற்



படும் தடைகளை நீக்குவதில், முட்டுக்கட்டைகளை உடைத்தெறிவதில், முன்னணிப் படை வீரனாகவும் செயற்படவேண்டியவனாகின்றான்."

ஒரு போராளியின் பணிகள் பற்றி மேற்கண்டவாறு ஜெனரல் கியாப் வரைவிலக்கணப் படுத்துகிறார். இந்த வாசகங் கள் விடுதலைப் புலிகளாலும் பின்பற்றப்பட்டு வருகின் றன.

ஈழப் போரின்போது, மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் பல சுற்றிவளைப்புகளுக்கும் பல அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனதற்கும், பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத் தப் பட்டவதற்கும் காரணமாக விருந்த மேஜர் ஜெவி. கருணா நாயக்கா

என்ற கொடிய அரக்கன் மீது கரும்புலி மேஜர் ரட்ணா வாகரையில் 1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 09 ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதலின்போது, அந்த இராணுவ அதிகாரி அழிக்கப்பட்டான். அவனது உதவியாளன் ஒருவன் படுகாயமடைந்தான்.

இதேபோல தேசத் துரோகியாகமாறி, மட்டக் களப்பு மக்களை இம்சைப்படுத்திய 'ராசிக் குழு' வின் தலைவன் கணேசகுமார்

வீரத்திலும் - தியாகத்திலும் - விடுதலை உணர்விலும் ஆண்களுக்கு எவ் வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது பெண் போராளிகள், தமது வீர சாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்

'ஓயாத அலைகள் மூன்று' நடவடிக்கையின் போது தோற்கடிக்கப்படமுடியாத பெரும் படையணியாக அவர்களது வளர்ச்சி காணப்பட்டது. தேசியத் தலைவரின் நெறிப் படுத்தலில் தளபதி சூசையின் வழிநடத் தலில் கடற்கரும் புலிகள் ஒரு படையணி யாக வளர்ச்சிபெறலாயினர். கடலிலே பெரும் துருப்புக்காவிக் கப்பல்கள், சுப்ப டோறாப் படகுகள், விநியோக யுத்தக் கப்பல்கள், நீரூந்து விசைப் படகுகள் எனப் பலவற்றைத் தாக்கி அழித்து, தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இவர்கள் பெரும் பலம் சேர்த்தார்கள்.

தரையில் சாதனை செய்த விடுதலைப் புலி கள் – எதிரியின் முகாம்களுக்குள் புயலாகப் புகுந்து செயற்பட்டார்கள். கடற்கரும் புலிகள் கடலிலே எரிமலையாக வெடித்தார்கள். 1990 ஆம் ஆண்டு ஆடிமாதம் 07 ஆம் திகதி முதற் கடற்கரும்புலிகள் மூவர் வல் வெட்டித்துறைக் கடற்பரப்பில் தரித்துநின்ற

# மாவீரர்கள் நாள் மக்களின் தேசியத் திருநாள்

திரையில் தோன்றி மறையும்."

மேலே குறிப்பிட்டவாறு மாவீரர் ஈகச் சுடரின் மகத்துவத்தை அற்புதமான வார்த்தைகளால் தேசியத் தலைவர் ஆத்மார்த்தமாகத் தரிசனம் செய்கிறார்.

ஒருவிடுதலைப் போராளி – அவன் வாழும் காலத்தில் இயக்கத்தின் உறுப்பினன். ஆனால், அவன் மண்மீட்புப் போரில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டால், அவன் மக்களின் சொத்து. "அவனுக்காகக் கட்டப்படும் கல்லறை அழுவதற்காகக் கட்டப்படுவதில்லை. மாறாக மக்கள் தொழுவதற்காகவே கட்டப்படுகிறது – அது வழிபாட்டிற்குரிய ஒரு சந்நிதானம். அவனது வாழ்க்கை மற்றவர்களுக்குப் பாடவிதானம்."

### விடுதலைப் புலிகளின் தோற்றமும், வளர்ச்சியும்

1970 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்தில் புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெய ரோடு செயற்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழ்த் தேசிய விடுதலைக்கான ஒரு அரசி யல் இராணுவக் கட்டமைப்பாக வடிவமைக்கப் பட்ட போது, 1975 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரைப் பெறலாயிற்று.

1982 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி, முதல் மாவீரன் லெப்.சங்கர் தியாக மரணமடைந்தார். அவர் மறைந்த தினம் மாவீரர் தினமாக விடுதலை இயக்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி கோப்பாயில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் முதல் பெண் போராளியான 2 ஆம் லெப்.மாலதி வீரமரணம் அடைந்தார். முதலாம் கட்ட ஈழப்போர்வரை 657 போராளிகள் மாவீரர்களானார்கள். தியாகி திலீபன், 657 ஆவது மாவீரனாவார்.

இதன்பின்னர் இந்திய இராணுவத்துடன் ஒரு தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட வேண்டிய நிலைமை உருவாக்கப்பட்டது. இந்திய அமைதிப்படை–ஆக்கிரமிப்புப் படை யான போது, இது தவிர்க்கப்பட முடியாது போனது. இந்திய இராணுவம் ஆக்கிரமித்து நின்ற காலத்தில், 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் பெண் போராளியான லெப். அனித்தா வீரமரணமடைந்தார். தொடர்பு சாதனங்களின் பாவனை மிகவும் குறைந் திருந்த காலகட்டத்தில் செய்திப் பரிமாற்றங்களை மிகவும் புத்திசாதுரியத்துடன் நிறை வேற்றிய லெப். அனித்தாவின் இழப்புப் பேரிழப்பேயாகும்.

### ஜெனரல் கியாப் கூறிய வாசகம்

ஒரு போராளியின் பணிகள் எப்படிப்பட்டவை என்பதை வீர வியட்னாமிய இளை

### ஈழப்போரில் கரும்புலிகளின் பங்களிப்பு

தமது உயிரை ஆயுதமாக்கித் தம்மை முழுமையாக அர்ப்பணிப்பவர்கள் கரும்புலிகளாவர். அவர்கள் நெருப்பு மனிதர்கள். ஆனால் அவர்களது உயிர்த் தியாகம் தெய்வீகமானது, புனிதமானது. அவர்கள் மென்மையான பஞ்சு போன்ற உள்ளம் படைத்தவர்கள். ஆனால், இரும்புபோன்ற உறுதி உடையவர்கள்.

1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 05 ஆம் திகதி, முதல் கரும்புலி மில்லர் களப்பலியானார். கரும்புலிகள் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் துரித வளர்ச்சிக்குக் காரணமானவர்கள். கப்டன் மில்லர் நெல்லியடி இராணுவ முகாமைத்தாக்கி, அழித்ததுபோல் 23.11.1990 அன்று லெப்.கேணல் போர்க் மாங்குளம் முகாமைத் தாக்கி அழித்தார். இதேபோல் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி பலாலி விமானத் தளம்மீது பதின்மூன்று கரும்புலிகள் தாக்குதலை மேற்கொண்டு களப்

**நேதாஜி**

பலியானார்கள்.

"ஓயாத அலைகள்" என்ற குறியீட்டுப் பெயருடன் விடுதலைப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட மண்மீட்புப் போரின்போது, போராட்டத்தின் இயங்குதிசை நோக்கிய பயணத்தில் கரும்புலிகள்தான் துரிதமான விசையாகச் செயற்பட்டவர்களாவர். ஓயாத அலைகள் மூன்று போரின்போது, கரும்புலி மேஜர்.தனு சனும், கரும்புலி மேஜர். சுதாயினியும் நடாத்திய கரும்புலித் தாக்குதலில் பளைப் பகுதியில் பேரினவாதிகளால் அமைக்கப்பட்டிருந்த நீண்டதூர ஆட்லறித் தளம் முற்றாகவே அழிக்கப்பட்டது. அந்த மாவீரர்களுக்கு இன்று தமிழீழம் தலை சாய்த்து வீரவணக்கம் செலுத்துகிறது.

### பொதுமக்களின் மத்தியில் கரும்புலிகளின் பணிகள்

போராட்டத்தின் கவசமாக இருப்பவர்கள் பொதுமக்களேயாவர். போராட்டக் காலங்களில் நெருப்பில் குளிப்பவர்கள் பொதுமக்களே எனத் தேசியத் தலைவர் ஒருமுறை குறிப்பிட்டார். இராணுவ அதிகாரிகளும், தேசத் துரோகிகளும் தமது இயலாமையை மூடிமறைக்க இனப்படுகொலைகளை மேற்கொள்வது எல்லாத் தேசிய விடுதலை வரலாற்றிலும் காணலாம். இவ்வாறான பொதுமக்களை இம்சைப்படுத்தி இனப்படுகொலைகளை மேற்கொண்ட இராணுவ அதிகாரிகள் – விடுதலைப் புலிகளாலும், கரும்புலிகளாலும் தாக்கி அழிக்கப்பட்டிருக்கிறார் கள்.

1990 ஆம் ஆண்டு ஆரம்பமான 2 ஆம் கட்ட

என்பவன் மீது 1999 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி கரும்புலி மேஜர் அரசப்பன் நடாத்திய கரும்புலித் தாக்குதலில் அவன் அழிக்கப்பட்டான்.

மேலே கூறிய இரண்டு சம்பவங்களின் பின்

யுத்தக்கப்பலான 'எடித்தாரா' என்ற கப்பலைத் தாக்கி மூழ்கடித்தார்கள். இதே போல முதல் பெண் கடற்கரும் புலித்தாக்குதலைக் கப்டன்.அங்கயற்கண்ணி மேற்கொண்டார். 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட்



னர்தான், மட்டக்களப்பு மக்கள் ஓரளவு நிம்மதியடைந்தார்கள். இது மக்களைக் காக்கும் மக்கள் பாணியில் கரும்புலிகள் தம்மை அர்ப்பணித்த மிகப்பெரிய தியாகமாகும். அவர்கள் இன்று மாவீரர்களாகப் போற்றப்படுகின்றனர்.

### கடற்புலிகளும், கடற்கரும்புலிகளும்

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவத் தளம்மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட 'ஆகாயக் கடல்வெளித் தாக்குதல்' நடவடிக்கையின்போது, கடற்புலிகளின் வளர்ச்சியின் தேவை உணரப்பட்டது. இதன் பின்னர் 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற பூநகரி இராணுவத் தளம்மீதான 'ஒப்பரேசன் தவளைப் பாய்ச்சல்' நடவடிக்கையின்போது கடற்புலிகள் கணிசமானளவு வளர்ச்சி பெற்றிருந்தார்கள். 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ஓயாத அலைகள் ஒன்று' மண் மீட்புப் போரில் கடற்புலிகள் முழுமையான வளர்ச்சி பெற்றார்கள். 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற

மாதம் 16 ஆம் திகதி காங்கேசன்துறைக் கடற்பரப்பில் தரித்துநின்ற கடல் கட்டளைக் கண்காணிப்புக் கப்பலான ஏ.516 என்ற இலக்கமுடைய யுத்தக் கப்பலைக் கடலடியாக நீந்திச் சென்று தாக்கி அழித்து, ஒரு புதிய அத்தியாயத்தை அவர் திறந்துவைத்தார்.

இவ்வாறாகத் தியாகத்தின் இமயத்தைத் தொட்டு விட்ட 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை நினைவுகூரும் இன்றைய தினம் வரலாற்றுச் சிறப்புடையதாகும். தமது இலக்கைத் தேடி அழித்து, போராட்டத்துக்கு உரம் சேர்த்த இன்னும் எத்தனையோ மாவீரர்கள் எழுதப்படாத கவிதைகளாகவும், வரையப்படாத சித்திரங்களாகவும் எங்கள் நெஞ்சம் என்ற நினைவாலயத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் பதித்த சுவடுகளை நாம் கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம். வரலாற்றுச் சுவடிகள் அவர்களுக்குச் சிரம்தாழ்த்தி மாவீர வணக்கம் செலுத்துகின்றன. ✪

# மாவீரர் நாள் நவம்பர் 27 - 2004

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத் திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்த மாவீரர்கள் மகத்தானவர்கள்.

## எழுத்துக்கள்

வீழும் வாழ்வு வீழ்ந்து கொண்டேயிருக்க
எங்கள் தேசத்தில்
எச்சங்களும் எலும்புகளும் நிரம்பின
வாழ்வைக் குறுக்கி
உணர்வில் உயிரேற்றி
உயிரை உருக்கி
கரைந்து கொண்டிருந்த வரலாற்றை
கல் வெட்டாய் ஆக்கினீர்கள்.
கொடுங்கோடை எரித்த போதெல்லாம்,
மழைத் தூறல்களால் நிலம் நனைத்து
இந்தத் தேசம் நிமிர்ந்து நிற்க
எங்கள் வேர்களுக்கு வாழ்வு கொடுத்தீர்கள்.
இன்று; ஒன்றின் மேல் ஒன்றாய்
உங்கள் முகங்கள் !

என் வலதுகைச் சுட்டுவிரல் நீட்டி
அரிவரியில் இருந்து மண்ணில்
'அ' னா எழுதப் பழகினேன்.
இன்றோ; காவியம் பாடும் அளவிற்கு
எழுத்துக்கள் சொற்களாய் வலிமை சேர்த்திற்று.
அழித்தழித்து எழுதிப் பழகிய
இந்த மண்ணிலேயே
நான் எழுதிய அத்தனை எழுத்துக்களும் இருந்தன.
உங்கள் முகங்கள் போலவே !

-துவாரகன்

## எழுந்திடுவீர் வீரரே

எழுந்திடுவீர் வீரரே கல்லறை நின்றெம்
இதயத்தில் எழுகின்ற உதயத்தையே தூண்டி

அழுந்திருள் ஒழித்தே செந்தமிழரின் நிலையோங்க
ஆதார எண்ணத்தில் மீதேறிப் பொழிந்திட

விண்முகில் கனிந்தது விடிந்ததெம் பொழுது
வீங்கிருள் அகன்றது வெருண்டது சிங்கம்
தண்முகம் அருணத் தழல்முக மானது
தடங்களில் தொடர்ந் தனர் இளையவர் ஒன்றாய்

மண்ணதும் புதுப்பசும் பொன்னிற மாகிட
மங்கலச் செங்கதிர் மலர்ந்தது வானில்
எம்முகம் காத்துமே இனமதைப் போற்றவும்
எழுந்தது இத்தினம் இளநிலை தொடரவே

ஆர்வத் தினால் மனம் தேடுதுன் சிறப்பை
அன்பு ள்ளம்பாடு துன்மாண்டதன் பொருளை
கார்த்திகைத் திங்களில் களிக்குமே என்றும்
கலங்கிடாது உறுதி உரமடையும் இனமே

சூரிய சோதிசேர் தாரகை போலும்
சுடரினில் ஒன்றாக ஒளிர்ந்துமே நிற்பீர்
பாரெல் லாம் உம் புகழ்பாடிட வருவார்
பார்த்தி டுவீர் தமிழீழம் மலர்வது அதனை

- நா.வரதராசா.

## இதயக் கோயில்கள்

தோப்புக் குயில்களே - மாவீரர்
தோள்களைப் பாடுங்கள்
யாப்புக் கவிதைகளே - மாவீரர்
யாப்பில் ஆழுங்கள்
ஆடும் மயில்களே - மாவீரர்
அழகாய் ஆடுங்கள்
ஓடும் நதிகளே - மாவீரர்
ஊர்களில் ஓடுங்கள்
கத்தும் கடல்களே - மாவீரர்
கதைகள் எழுதுங்கள்
முத்துப் பரல்களே - மாவீரர்
மௌனத்தை கூடுங்கள்
இதயக் கோயில்களே - மாவீரர்
இதயத்தை மீட்டுங்கள்
புதிய மறவர்களே - மாவீரர்
தமிழீழம் ஆக்குங்கள்

-வித்தியாசன்



## அணையாமல் காத்திடுவோம்

தேசத்தின் முன்னே பாசம் சிறிதென்று
செந்தமிழைக் காத்திட வீறுகொண் டெழுந்து
விடுதலைப் போரிலே வீரத்தைக் காட்டி
விதையாகி மண்ணில் அமைதியாய் உறங்குகின்றீர்

கார்த்திகை பிறந்தால் கண்கள் கலங்கிவிடும்
கண்ணீரும் வழிந்தோட கடல்மட்டம் உயர்ந்து விடும்
காளகத்துக் குயில்களெல்லாம் இசைபாட ஓடி வரும்
கார்முகிலும் மனமுருகி மழையாகப் பொழிந்துவிடும்

ஆயிரத்தில் ஒருவனாய் காவியத்தில் இடம்பிடித்து
ஆலயத்து மணிகளாய் எங்கும் ஒலித்திடுவீர்
அழியாத நினைவுகளாய் எம்மனதில் நிலைத்திருக்க
அகல் விளக்கை ஏற்றி வைத்து அணையாமல் காத்திடுவோம்.

விஜய் ஏபிரகாம்
பாஷையூர்

## புதுப்பரணி எழுதும் புலிப்படை...


வானம் வளைந்துங்களை
வணங்கும் - தன்
மானம் காத்தான்
தமிழனென்றே முழங்கும்

தென்றல் தேடிவந்துங்களை
தழுவும் - தன்னாடு
வென்றான் தமிழனென்றே
வெற்றிக் களிப்பிடும்

வங்கக் கடலெழுந்துமை
வாழ்த்தும் - இனி
தங்கத் தமிழீழம் மலருமென்றே
தூது செல்லும்

சங்கம் வளர்த்த
செந்தமிழ் வாழவென்றே
பொங்கிப் பகை முடித்த
மாவீரரே .............
விழி மூடிய சிகரங்களே - எங்கும்
நிறைந்த அகரங்களே
உங்கள் நினைவோடு
விடியும் வழி தேடியெம் பயணம் தொடரும்! - நாளை
புதுப் பரணி எழுதும் புலி ப்படை

நெற்கொழு தாசன்
வல்வை





## தமிழீழக் காவலரை எண்ணுவோம்

எழுச்சியின் திறவு கோலாய் எழுந்தவர்கள்
எண்ணத்தின் நாற்றாங்காலாய் எழுந்தவர்கள்
விழிப்புற்ற தாயகம் காண எழுந்தவர்கள்
விடி வெள்ளித் தூதுவராய் எழுந்தவர்கள்
அழிவில்லா வரலாறு படைக்க எழுந்தவர்கள்
அன்னை மண் விலங்கொழிக்க எழுந்தவர்கள்
தளர்வில்லா தமிழ் மானம் காக்க எழுந்தவர்கள்
தமிழீழ காவலராய் எழுந்தவர்கள்

மதுரகவி காரை. எம்.பி அருளானந்தன்

## எங்களூர்க் கோயில்கள்

உயிர்களை உறிஞ்சிக் கொண்டிருக்கும்
உக்கிரப் போர்
உரிமை கேட்டதற்காக
எம் மீது திணிக்கப்பட்டது.

கொடிய யுத்தத்துள் வாழ்ந்து வாழ்ந்து
எங்கள் வசந்தங்கள் எல்லாம்
எங்கோ தொலைந்து போயின
குருதி பாயும் குரூர யுத்தத்தில்
இழந்தவை ஏராளம்!

சிதைந்த நிலத்தின் வடுக்களை
செப்பனிட்டுக் கட்டியெழுப்ப
தாயகக் கனவுடன் கருத்தரித்தனர்
நவயுகச் சிற்பிகள்
மலை நிகர் நெஞ்சுடன் இவர்கள்
எழுந்து நிமிர்ந்ததால்
தலைநிமிர்ந்தது தமிழினம்!

இந்தத் தாயக வேள்வியின்
வெற்றிக் கனிகளைப் பறித்திட
சில தியாக தீபங்கள்
காற்றினில் கலந்து மறைந்தன.

விதைக்கப்பட்ட வித்துடல்களுக்காய்
மாவீரர் துயிலும் இல்லங்கள்
துளிர்த்து எழுந்தன விருட்சமாய்
இனி இவை தான் எங்களூர்
கோயில்களும் தேவாலயங்களும்!
நாம் வழிபடும் தெய்வங்களும்
இந்த மாவீரர்கள் தான்.

-ச.முருகானந்தன்



## மாவீரர்

பிறக்கும் போது
மகிழ்வைத் தருவதும்
இறக்கும் போது
துயரைத் தருவதும்
இயற்கை என்றாலும்
மண்ணில் புதைந்த
பின்னர் எமக்கு
இன்பம் வர வேண்டும்
என்று சென்றவர்கள்
'மாவீரர்'
துயர் சூழ்ந்த வாழ்வில்
இடர் தீர்க்க என்று
எதிரிப் படை
வதம் செய்து நின்றார்
வெற்றி பல தந்து
எங்கள் வாழ்வுக்கு
ஒளியேற்றி நின்றார்

வாடாத மலராக என்றும்
எம் தேசத்து மலர்கள்
இவர், தாயகத்தின்
ஒளிச் சுடர்கள்
அவர் நினைவு சுமக்கும்
தேசம் - நாளை
விடிவு காணும்.

சோ.சி. கலைக்கதிர்
கிளிநொச்சி

# மாவீரர் நாள் நவம்பர் 27 - 2004

கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அநாமதேயமாக உறங்கிய போதும், அவர்களது வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ்பெற்று வாழும்.

## அற்புதமாய்ச் சாதனைகள் படைத்தோரே வாழ்க!

மண் காத்து இனம் காத்த மாவீரர் வாழ்க
மனவுறுதி படைத்தொன்றாய்க் களம்புகுந்தோர் வாழ்க
அண்ணன் சொல் சிரமேற்று அடிபணிந்தோர் வாழ்க
அகிலமெங்கும் புகழ்பரவ உயிரீந்தோர் வாழ்க

பெற்றவரை வளர்த்தவரைப் புறந்தள்ளிவிட்டு
கற்றுவிட்ட கல்வியினால் மெய்யுணர்ந்தோர் வாழ்க
சற்றேனு மஞ்சாது எதிரிகளை மடக்கி
அற்புதமாய்ச் சாதனைகள் படைத்தோரே வாழ்க

மானந்தான் பெரிதென்று உணர்ந்தோரே வாழ்க
மாண்புமிகு தலைவனுரை கேட்டொன்றா யிணைந்து
கானகத்தில் பாதகரின் படை மடக்கி வீழ்த்தி
கண்ணான பொன்னிலத்தைக் காத்தவரே வாழ்க.

நள்ளிரவில் துஞ்சாது காப்பரணில் நின்று
நகர்ந்து வந்த படையினரைச் சாய்த்தவரே வாழ்க
துள்ளியெழு விளமையிலும் தாய் நாட்டுப் பற்றால்
தூயபணிக் குயிர்ந்த தியாகிகளே வாழ்க.

நெடுஞ்சாலை போர்முகத்தில் ஒதுங்கிநின் றாங்கு
நெடுநேரம் கூர்மையுடன் பகைவரவு பார்த்து
படையூடு பாய்ந்தெதிரி வாகனங்கள் தகர்த்து
பகைவனின் மமதையை மடக்கியோர் வாழ்க.

- மாரீசன்.

## மாவீரர் நாள்

இன்று கார்த்திகை இருபத்தேழு - எம்
காவல் தெய்வங்களின் திருநாள்
விதைத்த வயல் தேடி வந்து
ஊர் கூடி உறவாடும் காணிக்கைப்
பெருநாள் கண்ணீருடன்
கல்லும் கசிந்துருகி காலடி தொட்டு
வணங்கிடும் தமிழர் தேசத்தின்
பொன் நாள் .............

உணர்வுகளை உருக்கி
நெய் விளக்கேற்றி, சுடரும்
தீபத்துக்குள் முகம் கண்டு
மெல்லச் சிரிக்க, மௌன
பாசைகளால் மட்டும்
உறவாடிக் கொள்ளும்
உத்தமர்களின் உயிர் நாள்

வேதனை வாழ்வை நீக்கிட - புதிய
சாதனை படைத்து விட்டு
தமிழீழ வரவிற்காய் காத்திருக்கின்ற
கரிகாலன் பிள்ளைகளின்
வீரம் விளையாடும் வெற்றி நாள்
கார்த்திகைப் பூக்களும்
பச்சைப் பசும் புற்செடிகளும்
பாட்டிசைக் குயில்களும்
நாட்டிய மயில்களும் போற்றியே
வணங்கிடும் ஓர் நாள் - எங்கள்
கார்த்திகைக் கதாநாயகர்கள்
பூத்திடும் புனிதநாள் - இது
மானத் தமிழரின் மாவீரர் நாள்

கி.கலையுஸா-யாழ்.

## இதய தீபத்தால் ஒளியேற்றிடுவோம்

இலைகள் உதிர்வதால் தான்
நாளை புதிய தளிர்களைப் பிரசவிக்கின்றன.
சூரியன் மாலையில் அஸ்தமிப்பதால் தான்
மறுநாள் காலையில் உதயமாகின்றான்
எங்கள் மாவீரக் குழந்தைகளே!
நீங்கள் இல்லறைகளில் உறங்குவதால் தான்
நாங்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம்
எங்கள் தேசத்தின் முத்துக்களே!
எங்கள் விடிவானில் சஞ்சரிக்கும்
விடுதலைச் சூரியர்களே!
இனம் வாழ இருளோடு இருளாக
அலையோடு அலையாக
அஸ்தமித்துப் போன
எங்கள் மாவீரச் செல்வங்களே!
கொட்டும் மழையிலும்
உங்கள் பூவுடல் தாங்கிய
சந்தனப் பேழைகளுக்கு
எங்கள் இதய தீபத்தால் ஒளியேற்றி
அஞ்சலிக்கின்றோம்.

உரும்பையூர் உதயநிலா

## மீண்டும் ஒரு புயலாகி

மாவீரர் கல்லறைகள் திறந்திட வேண்டும்
மறுபிறப்பாய் உயிரோடு எழுந்திட வேண்டும்
சீரழியும் தமிழினத்தைக் கண்டிட வேண்டும்
சினம் கொண்டு புலியாகப் பாய்ந்திட வேண்டும்

பண்பாட்டை சிதைக்கின்ற பாவையர் எல்லாம்
பார்த்தவுடன் பயத்துடனே திருந்திட வேண்டும்
வக்கிரமாய் உடையணிந்து ஆட்டம் போடும்
வனிதையரின் கொட்டமதை அடக்கிட வேண்டும்

அலிகளாய் காதினிலே வளையல் போடும்
ஆடவரை கண்டித்து திருத்திட வேண்டும்
அலங்கோலத் தலையுடனே அசிங்கமாய் பவனி வரும்
இளைஞர் கூட்டமதை விரட்டிட வேண்டும்

கள்வர்களால் கதிகலங்கும் மக்கள் கூட்டம்
கவலையின்றி உறங்கிடவே உறுதி வேண்டும்
மதுவுடனே மங்கையரின் பின்னால் செல்லும்
மதிகெட்ட மனிதர்களை மடக்கிட வேண்டும்

சமாதானம் தோன்றியதால் ஆட்டம் போடும்
சாக்கடைப் பூச்சிகளை அழித்திட வேண்டும்
ஈழத்தில் அச்சமின்றி ஆடிப் பாட
இரக்கமின்றி தண்டனைகள் வழங்கிட வேண்டும்.

ஏ.விஜயன் பாசையூர்

## ஒரு மொழி பேசிடுங்கள்

கல்லறையில் உறங்கும் கண்மணிகளே!
கனிவுடன் ஒரு மொழி பேசிடுங்கள்.
கண்மூடித் தூங்கும் காவியர்களே!
கண் திறந்தொரு முறை பார்த்திடுங்கள்
தமிழீழத்தின் வீரத் தெய்வங்கள் நீங்கள்
தமிழீழத்தின் வீரக் குழந்தைகள் நீங்கள்
தாய் நிலத்தின் விதைகள் நீங்கள்
தாய் நிலத்தின் ஆணிவேர் நீங்கள்
உமை நினைத்து
கவியென்ன கவி காவியமே எழுதுவேன்
பாட்டென்ன பாட்டு பாரதமே புனைந்திடுவேன்
கார்த்திகை இருபத்தேழு மட்டுமா
காலமெல்லாம் உம் நினைவே
'மாவீரர்' எனும் பெயர் பொறித்து
மான்புடன் உறங்கும் உறவுகளே
மண்டியிடுகிறேன் எம்முடன் நீங்கள்
ஒருமுறை பார்த்து ஒருமொழி பேசிடுங்கள்.

எஸ்.ஜே.சீலன்

## ஒளியேற்றும் மௌனத்தில்

கார்த்திகையில் ஒளி பிறந்தது...
கல்லறைப்பூக்கள் பூத்துச் சிரித்தன...
ஊர்முழுதும் ஊற்றெடுத்து கசிந்துருகும்...!
காற்றுறையும் கண்ணிலும்
கண்ணீர்த் துளிகள் கலந்துவிடும்...
மண் காக்கும் வீரர்களின் மனங்களில்
மகத்தான நாள் இன்று...!

வானோசை முழங்கும்...!
வேர்கிழிக்கும் மண்ணிலும்...;
கடலடியிலும் காலோசை கேட்கும்...
கார்த்திகை இருபத்தேழில்
கல்லறைகள் காற்றெதிரிலும் ஒலிக்கும்...!

தேசச் சுமை தாங்கி
நேசப் பரிதவிப்புடனே நிறைந்தீர்...!
பாசச் சிலுவையறைந்து - அண்ணன்
பாசறையிலிருந்து பகைமுடித் தெழுந்தீர்...!
உங்களுக்காய்;
வாசமலர் தூவி வந்தோம் விளக்கேற்றி
உணர்வொலிகள் தட்டும் ஒரு நிமிடம்
உறங்குங்கள் உங்கள் வழி திறந்து...!

-என்.பிறேமசீலன்
கோண்டாவில்.

## எல்லாமே எம்செய்கள்

ஈரம் கசியா இதயத்தில் அஞ்சாத
வீரம் விளைய முடியாது! தவராத
வீரம் விளையா நெஞ்சில் படுகொலையின்
கோரம் எதிர்க்கும் கொள்கை சனிக்காது!
அடக்கப் படுகின்ற அழிக்கப் படுகின்ற
ஒடுக்கப் படுகின்ற ஒடிக்கப் படுகின்ற
இனம் ஒன்று மீள, எதிர்காலம் நன்கெய்த
தனை ஈயத் துணிந்து தக்க அணி சேர்ந்து
தாகம் பசிதாங்கி சன்னங்கள் குண்டுகளை
வேகப் படகின் விமானத்தின் கணைதம்மை
சிற்றா யுதங்களால் தீரமுடன் எதிர்கொண்டு
குற்றுடல ராகிவிட்ட குணமலைகள் எத்தனைபேர்?
களத்தில் கடலில் கணத்தில் நெடுஞ்சாலை
கவிப்போ டேற்ற காவியங்கள் எத்தனை பேர்?
பல்லா யிரம்! ஆமாம் பலபத்தா யிரமன்றோ?
எல்லாமே எம்சேய்கள் எமக்காய்ச் சிதைந்தார்கள்!

ஏன் செத்தார்? எண்ண எமக்கின்று நேரமில்லை!
நான், நான் எனும்பித்தில் நல்லுணர்வு நல்லசிந்தை
அனைத்தும் தேய அலைகின்றோம்! நாக்களினை
நனைத்துக் கிடக்கின்றோம் நமைக்கொல்லும் நஞ்சில்!

ஒருவேளைச் சோற்றால் உவப்பித்தெமை எங்கள்
பெருஞ்சோற்று வயலைப் பிடிக்கும் மாற்றான் சூழ்ச்சி
உணரச் சினக்க உருத்தெழும்ப வைக்கின்ற
பணியில் வல்ல பசியதமிழ்க் கலைகளினால்
தமிழ்ப்பற்றுத் தீயாய்ச் சாடி எழவைக்கின்ற
அமிழ்தான இலக்கிய ஆக்கங்களினூடு
மாவீர மாமணிகள்! மாணவரே! உம்போன்ற
தேவோரைப் படைக்கச் செய்வோம் சபதங்கள்!

-த.வே.பஞ்சாட்சரம்-

## மாவீரர்

தமிழரின் விடுதலைக்காய்
புயல் அடித்த போதும்
பூகம்பம் பொங்கிய போதும்
தணிந்து விடோம் என்று
பாயும் புலியாய்
விடுதலைக்காய் நீருள் மூழ்கி
மூத்துப் பொறுக்கி
மண் பற் றுணர்ந்து
மண் விடுவிக்க வந்தவரை
மண்ணணிலிருந்து துரத்தி

பொங்கும் கடலில்
கந்தகப் படகேறி
பகைவனின் படகெரித்து
கண் இழந்தும்
கால் இழந்தும்
தாய் மண் காத்து
தமிழர் மனங்களில்
பூத்துக் குலுங்கி
வீரச் செம்மலர்களாய்
திகழ்பவர்கள் மாவீரர்.

-இன்பராஜ் மீசாலை.

## மாவீரர் நாள் நவம்பர் 27 – 2004

# கடல்மடி உறங்கும் கண்மணிகாள்





இந்தக் கடல் தமிழீழத்தின் வெற்றிக்கு
உறுதுணை நிற்கும் கடல்
கரிகாலனின் கடல் மறவர்கள்
களமாட களமேடையான கடல்
நித்தம் நித்தம் கடல் மறவர்களின் படகுகள்
நீண்டநெடுந்தூரம் செல்லும் கடல்
புத்தம் புதிய போர்க்கலன்களோடு
போராட்டத் தேவையைப் பூர்த்திசெய்யும் கடல்
சொந்தம் இது எனதென எதிரி செப்பினாலும்
பந்தம் நான் கடல் மறவரோடென பறைசாற்றும்
கடல்
விந்தை பல புரியும் கடல் வேங்கையர்க்கு
வந்த பகையொழிக்க வகை தந்த கடல்

அந்திமாலை வேளை அலைதாவிச் சென்று
வந்தபகை ஒழித்து வளமுடன் கரைசேரும்
விந்தை பல செய்வார் விநியோகப் பணி
செய்வோர்
இந்தச் செயல்வேளை இடியன் புடைசூழ
அந்தக் கடற்பரப்பில் அணியணியாய்ச் சென்று
நிந்தை புரிவோர் தமை எதிர்க்க
நிலை எடுத்திடுவர் எங்கள் கடல்மறவர்

கொட்டும் மழையும் கோரக் கடலலையும்
சற்றும் இரக்கமின்றி சாடிநிற்கும் காற்றுகளும்
வெட்டவெளியான காப்பற்ற கடற்பரப்பும்
சொட்டும் இவர் தம்மைத் துஞ்சிடத்தான்
செய்வதில்லை
இட்டபணியை எதுவரினும் நேர்கொண்டு
திட்டமதற்கமையச் செய்து நிற்கத் துணைபோகும்
மட்டுக்கடங்கா இவர் மனத் துணிவுடன்
செயற்திறனை
கொட்டி வளர்த்தவன் யார்?
வேங்கையர் தம் முதல்வனன்றோ

ஓய்வில்லை உறக்கமில்லை
ஒருவேளை உணவுமில்லை
சோர்வதில்லை துவள்வதில்லை துணிவுதானும்
குறைவதில்லை
துள்ளும் அலைதாவி தவழ்ந்துவரும்
உப்புக்காற்றே
மறவர் இவருடலில் வலுச்சேர்த்து நின்றனையோ·

ஆனையும் அறுகம்புல் தனில் அடிசறுக்கும்
சேனையும் சிலவேளை தன் செயற்திறனில்
பின்னடையும்
வெற்றிக் கனிபறித்து வெண்மணற்றிடரில்
கணங்களுண்டு
சற்றும் எதிர்பாராது சரிந்து வீழ்ந்த கணங்களுண்டு

கொட்டிக் குலாவி கொடி ஒன்றின் கீழ்வாழ்ந்த இவர்
சிட்டாய்ப் பறந்து சிறகடித்து நின்ற
இவர் துட்டர் கொடுமையினால் தொடுவான்
கடற்பரப்பில்
முட்டி எழும் போரில் மோதி மடிவதுண்டு
களமொன்று நடக்குங்கால் கடல்வேங்கை மாவீரர்
உடல்தன்னை மீட்டெடுத்து கரைமீள்தல்
வழக்கமன்றோ
சிலவேளை உடன்தோழர் உடல்மீட்க இயலாயின்
கடலன்னை கையேற்று தன் மடிமீது வைப்பதுண்டு
அவ்வேளை....
விடை கண்ணின் நீராக வீழ்ந்து கடல் நீர்சேர
படைவந்து கரைசேரும் பல நிகழ்வு எமக்குண்டு
இன்றைய நாள்
விடுதலைக்கு வித்தாகி வீழ்ந்த
மாவேங்கையர் தம்நினைவு நாள்
சொத்தாக இவர்க் கண்ணன் அளித்த
துயிலுமில்லம் எலாம்
சுடர் ஏற்றி இவர் புகழ் பாடும் நாள்
நறுமணங்கமழ் தூபம் நாற்றிசையும் காற்றோடு
கலக்கும் நாள்
மலர்தூவி மாலையிட்டு மாவீரரை
மனதிற்கொள்ளும் நாள் இப்பெருநாளில்
எங்கள் உறவுகள்....... எத்தனை மாவீரர்
கடல்வேங்கையர்
இந்தக் கடல் மடியில்
புத்தம் புதிய சீருடை நாம் போடவில்லை இவருடலில்
உற்றம் சுற்றம் ஒன்றுதானும் பார்க்கவில்லை இவர்
உடலை
போர்க்கும் புலிக்கொடியும் போடவில்லை
இவர் மேனிதனில்
பொன் வர்ணச் சந்தணப் பேழைகூட
தாங்கவில்லை புகழுடலை
எந்தமலர் மாலைகளும் சேரவில்லை அணிந்துவிட
எடுத்து வர ஊர்தியில்லை நாம்
துயிலுமில்லம் செல்லவில்லை


எந்தையர் ஆண்ட கடல்மடியில்
உறங்கிநிற்கும் தோழர்களே!
உங்களை நினைவுகூர ஓடிவந்தோம்
கடல் நாடிவந்தோம்
ஈகச் சுடர் நாம் ஏற்றுகின்றோம்
எழில் மலர்வளையம் சாற்றுகின்றோம்
தூபம் காட்டி மணங்கமழ் மலர் தூவுகின்றோம்
அமைதியாய் உறங்குங்கள்
அலைமீது நாம் தொடர்வோம்.

**விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்**

# மாவீரர் நாள் நவம்பர் 27 - 2004

## தன்னைப் பழித்தவனை தாய்தடுத்தாலும் விட்டுவிடு
## தமிழைப் பழித்தவனை தாய்தடுத்தாலும் விட்டுவிடாதே

"இனிவரும் சமுதாயம் எங்களைப்போல் அறப்போராளி களாக நின்று அடிவாங்காது, ஆயுதம் தூக்கி அவர்களை ஓடவைப்பார்கள். இது உறுதியான உண்மை. அறம் வெல்



ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகிவரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான - நேர்மையான சமுதாயமாக மாற்றியமைக்கவேண்டும்.

லாமல் ஆயுதத்தாலே வென்று நாடு மீட்பார்கள்"

அன்று தம் உரிமைகளை அகிம்சைவாதிகளாகக் கேட்டு தோற்றுப்போன தமிழ் அறப்போராளிகளால் கூறப்பட்ட வார்த்தை இன்று நிஜமாகி நிற்கும் வார்த்தை. விலைமதிப்பற்ற உயிர். அதனைப் பலிகொடுக்காமலே தம் உரிமைகளைப் பெற்றிட தமிழர்கள் சாத்வீக வழியில் போராடினார்கள். கைகலப்பின்றியே வாய்ப்பேச்சால் தம் உரிமைகளைப் பெற்றிட வழி தேடினார்கள். கொடுத்ததா சிங்களப் பேரினவாதம்? தமிழர்கள் தம் உணர்வுகளுக்கேனும் மதிப்புக் கொடுத்ததா? பொருட்டாகவே எடுக்கவில்லை. கசக்கிப் பிழிந்தார்கள், போட்டு மிதித்தார்கள்.

வெள்ளைக்காரன் நாட்டை விட்டு வெளியேறியபோது, இரு இனத்தவர்களிடமும் பிரித்துக் கொடுக்க எண்ணினான். தமிழ்த் தலைவர்கள்தான் அதனை மறுத்து, ஒன்றாகவே இருப்போம். அதுவும் நாங்கள் ஆண்டால் என்ன அவர்கள ஆண்டால் என்ன? இரண்டு இனங்களும் ஒருவர் இல்லாமல் மற்றவர் வாழவேமுடியாது என்று நம்பினர். சிங்களப் பேரினவாதம் சகுனியாக நாட்டை அபகரித்துக் கொண்டனர். தமிழனின் தலைவிதி தாறுமாறானது.

"தன்னைப் பழித்தவனை தாய் தடுத்தால் விட்டுவிடு. தமிழைப் பழிததவனை தாய் தடுத்தாலும் விட்டு விடாதே" தமிழர் தம் மொழிக்கு வேட்டு வைத்தான். தனிச் சிங்களம் நடைமுறைப்படுத்த எண்ணியது சிங்களப் பேரினவாதம். எனவே பொங்கு தமிழுக்கு இன்னல் வருமென்றால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு என தனிச்சிங்கள மசோதாவை எதிர்த்தனர். தமிழர்கள் தம் மொழியையும் சிங்களவர் தம் மொழியையும் பயன்படுத்துவோம் என்ற நியாயமான எண்ணத்தோடு தம் நாட்டை வடக்கு - கிழக்காகப் பிரிக்கும் படி கூறி, 1956 ஜூன் நான்காம் நாள் போராளிகள் நாடாளுமன்றத்துக்கு முன்னால் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தினர். ஆனால் சிங்களப் பேரினவாதம் தம் சொந்த இயல்பை வெளிப்படுத்தியது. அடி உதை கொடுத்து அனைத்துப் போராளிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சாத்வீகப் போராடடத்தை ஆயுத போராட்டத்தினால் அடக்கினாார்கள். தமிழர்களுடைய பொருட்களை அபகரித்தார்கள். இத்தனை கொடுமைகளையும் மேல் மாடியில் நின்று பிரதமர் பண்டார நாயக்க இரசித்துக் கொண்டு நின்றார். அமிர்தலிங்கம் தலையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. தனிநாயகம் அடிகளாரும் போராட்டத்தில் நின்றிருந்தார்.

தமிழரின் அகிம்சை வழிக் கருத்து எடுபடவில்லை. ஜூன் பதினைந்தாம் நாள் சிங்கள மசோதா அமுலுக்கு வந்தது. எனவே, இலங்கை வாழ் தமிழர்களின் ஒன்றித்த எதிர்ப்பைக் காட்டுவதற்கு திருமலை யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கையின் எல்லாத் திசையின் மக்களும் கலந்து கொள்ளத் துணிந்தனர். இதன் விளைவு ஆவணிமாதம் 16 ஆம் நாள் அடிபடாமலும் தமிழன் அகிம்சைப் போர் செய்யவும் அஞ்சமாட்டான் என்பதை அகிலம் அறியச்செய்த நாள். ஊர்காவற்துறை, பருத்தித்துறை, மன்னார், திருக்கோவில் ஆகியவற்றிலிருந்து தொடர்ந்த பாதயாத்திரை திருமலை முற்றவெளியில் மூன்று நாள் மாநாடு ஆட்சியாளரை அதிர வைத்தது. 1959 ஆவணி மாதம் 20 ஆம் திகதிக்கிடையில் பிரதம மந்திரியும், இலங்கை நாடாளுமன்றமும் இலங்கை சமஷ்டி அரசை நிறுவத்தேவையான நடவடிக்கை எடுக்கத் தவறின் அவ்விலட்சியத்தை அடைவதற்காக சாத்வீக வழியில், கட்சி நேரடி வழியில் அரசிற்கு திகிலூட்டுவதாக அமைந்தது,

அடுத்த கட்டமாக சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் தமிழ மொழயை முழுவதுமாக அழிக்க எடுத்த திட்டம் தடுமாறிப்போனது. இதனால் கீழிருந்து மேலே போவோம் என்ற நோக்கில் அரசிற்குச் சொந்தமான வாகனங்களின் இலக்கத் தகடுகளில் இதுவரையில் பொறித்திருந்த ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக சிங்கள ஸ்ரீயை பொறிப்பது என்ற திட் டம். இதனை எதிர்த்து 1957 ஜனவரி 19 ஆம் நாள் சிங்கள எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்தனர். சிங்கள ஸ்ரீக்குப் பதிலாக தமிழர் தம் வாகனங்களில் தமிழ் ஸ்ரீயைப் பொறித்தனர். இந்தப் போராட்டம் நாளடைவில் சிங்களப் பகுதிகளில் தமிழ் எழுத்துக்களை அழிக்கும் போராட்டமாக மாறியது.

எனவே தமிழ் மக்களின் உணர் வுகளை மதிக்காத அரசிற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் நாளாக சுதந்திர தினத்தை அனுஷ்டிக்க முடிவுசெய்தனர். 1957 பெப்ரவரி நான்காம் நாள் இலங்கையின் சுதந்திரதினம் தமிழருக்கு இருண்டிருந்ததனால அந்த நாள் கரிநாளாக, துக்க நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத் தமிழர்களின் உணர்வுகளை மதியாது திறக்கப்பட்ட சிங்களக் கடைகளின் முன்னரும், பஸ்வண்டிகளிலும் முந்நூறு பெண் தொண்டர்கள் உட்பட பலபேர் சத்தியாக்கிரகம் இருந்தனர். இதன் உச்சநிகழ்வாகத் திருகோணமலையின் சந்தைக் கட்டடத்திற்கு முன் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி, கறுப்புக்கொடி கட்டிய இளைஞன் நடராஜன் சுட்டுவீழ்த்தப்பட்டான். அகிம்சாவாதி தமிழன் ஆயுததாரி சிங்களவனால் அழிக்கப்பட்டான்.

இவ்வாறே தமிழர்கள் தம் உரிமைகளை சாத்வீக வழியல் நின்று சறுகாமல், உறுதியோடு கூறிக் கொண்டு நின்றார்கள். இதனால் 1957 ஜூலை 26 ஆம் நாள் தமிழருக்கு ஓரளவு பாதுகாப்பு அழிக்கக்கூடிய வகையில் அந்தப் பண்டார நாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம் நள்ளிர வில் கைச்சாத்திடப்பட்டது. அதுவும் நயவஞ்சகத் திட்டத்துடனே. எனவே 1958 ஒகஸ்ட் 20 நடக்கவிருந்த போராட்டம் கைவிடப்பட்டது. தமிழனக்கு ஓரளவு உரிமைகள் தானும் கிடைக்க விரும்பாத தீய சக்திகள், இன்று ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயபோல அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான கண்டன ஊர்வலங்கள் பௌத்தர்களுக்குள் போராட்டம், தமிழினம் கொதித்தெழுந்தது. மீண்டும் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டங்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். -தமிழ் எழுத்துக்களை மலையகத்தில் அழித்தவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய காரணத்திற்காக மலையகத் தமிழர்களான பொசுவர்தலாவை, தமிழ் மறவர்கள் பிரான்சிஸ் ஐயா ஆகியோர் சிங்களப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அது மட்டுமல்ல தமிழர்களை முட்டாள்களாக்கும் செயலாக நம்பிக்கைத் துரோகமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட எட்டு மாதங்களின் பின்னர் 1958 ஏப்ரல் 8 ஆம் நாள் தமிழ் தந்தை செல்வநாயகம் செய்து கொண்ட ஒப்பந்தம், அவரது ஆலோசனை இல்லாமல் கிழித்து எறியப்பட்டது. இருபத்தைந்து லட்சம் தமிழர்களின் ஏக்கம் கிழிக்கப்பட்டது. நம்பி ஏமாந்த தமிழன் மீண்டும் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். இந்த நிலையின் ஆரம்பமே மே 23, 24, 25 திகதிகளில் வவுனியாவில் மாநாடு கூட்டுவது என்று தீர்மானித்தனர்.

மாநாடு ஆரம்பமாயின் மாநாட்டில் கலந்து கொள்ள மட்டக்களப்பில் இருந்து தொண்டர்கள் வந்த புகையிரதம் பொலநறுவையில் அடித்து நொறுக்கப்பட்டது. நகர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் அடித்துக் கொலை செய்யப்பட்டனர். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். கர்ப்பிணிப்பெண் ஒருத்தி நடுவீதியில் வயிறு கிழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். தமிழ்க் கடைகள், வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டன. முகாம்களில் தங்கியிருந்த தமிழர்கள், காவல்துறையை மீறி துவம்சம் செய்தனர். கேலி செய்தனர். பேரினவாதிகளின் உச்ச வெறித்தனமாக, அவர்களில் முன்னனி வகித்துக் கொண்டிருந்தவன் தனது இடையில் கட்டியிருந்த ஆடையை உயர்த்தூக்கி, நிர்வாண நடனம் ஆடினான். மனிதத்தன்மை மூண்டிழுத்தது காவற்துறையினர் அதனைத் தடுத்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சுருண்டு விழுந்தான் நிர்வாண மனிதன். அகிம்சை ஏறுக் கொள்ளப்படவில்லை. பரவியிலவை. ஆனால் மிதிபட்டுக் கொல்லப்பட்டுவிட்டதே?

தமிழர்கள் சிந்திய இரத்தமும் பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டதால் விட்ட கண்ணீரும், உறவுக்குள் உயர்வான தாய்மை, கொடூரமுறையில் கொல்லப்பட்டு, இயற்கை அடைந்த அதிர்ச்சியும் சொத்துகளை இழந்து கஷ்டப்பட்டு கட்டிய வீட்டையும் இழந்து, விட்ட கண்ணீரும் ஒன்று சேர்ந்து, ஒரு தீர்ப்புச் சொல்லியது. அது தான் 1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26 ஆம் நாள் பிரதமர் பண்டாரநாயக்க துப்பாக்கிக்குப் பலியானது.

இந்த நிலையில் மீண்டும் 1960 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடப்புபடுதியில் செல்வநாயகம் தலைமையில் அரசியல் தலைவர்கள் அடங்கிய குழுவினரை பிரதமரை சந்தித்தது. பயன்கிட்டவில்லை. போராட்டம் தொடங்கியது. 1961ஆம் ஆண்டு தை மாதம் 30 ஆம் திகதி வடக்கு - கிழக்கில் உள்ள அரச ஊழியர்களுக்கு பகிரங்க அறிக்கையொன்று விடப்பட்டது. அதில் சிங்கள மொழியில் அரச கடமைகள் ஆற்ற வேண்டாம். அரசுடன் கொள்ளும் தொடர்பானது சிங்களத்தில் மேற்கொள்ள வேண்டாம். சிங்கள முத்திரை பொறிப்பதையோ சிங்களத்தில் ஒப்பமிடுவதையோ தவிர்க்கும் படி கோரப்பட்டது. தமிழர்கள் தம் மொழியினை விட்டுக் கொடுக்கவில்லை, இந்தக் கருத்தினை ஏற்று, அதுவரையும் ஆங்கிலத்தில் கடமையாற்றி வந்த ஊழியர்கள் தமிழ் மொழியில் கடமையாற்றத் தொடங்கினர். ஆனால் அரச தரப்பில் மாற்றம் ஏற்படவில்லை. இதனால் நேரடிப் போராட்டத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. (கச்சேரி மறியல் போராட்டம்)

பெப்ரவரி (20) இருபது யாழ். கச்சேரி பிரதான வாயிலில் தலைவர்களும் தொண்டர்களும் வந்து குழுமினர். 7.30 மணிக்கு அறப்போர் ஆரம்பமாகியது. வெண்ணாடை அணிந்து சமாதான விரும்பிகளாக எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாக இருந்தனர்.

கச்சேரி ஊழியர்கள் வேலைக்குச் செல்ல அனுமதியாது தடுத்து, அதன் மூலம் கச்சேரி நிர்வாகத்தை செயற்படாமல் செய்து, அரச நிர்வாக செயற்பாடுகளை நடைபெறாது செய்தல் மூலம் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக பயன்படுத்த அரசை சம்மதிக்கச் செய்வது இதுவே அறப்போராளிகளின் முழு நோக்கம். கச்சேரி வேலையாட்கள் உள்ளே நுழையமுடியவில்லை, வெளியில் நின்றனர். என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கப் பொது மக்கள் கூடினர். ஐந்து நிமிடங்களின் பின் பொலிஸ் அதிபர் ஜீப் வந்தது. காவல் துறையினர் தம் கடமைகளை செய்ய அறப்போராளிகள் தடையாக இருக்கக் கூடாது என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்தால், பொலிஸ் அதிபர் ஜீப் உள்ளே செல்ல வழிவிட இடம் கொடுத்தனர். பொலிஸ் அதிபர் ஜீப்பை விட்டிறங்கி, பொலிஸார் அணி வகுத்து நிற்க, உள்ளே வந்து, கச்சேரி ஊழியர்கள் உள்ளே வர வழி விடும்படி சத்தியாக கிரகர்களிடம் கூறினார். அவரது வார்த்தைகளை அவர்கள் ஏற்கவில்லை. முன்னும் நின்றிருந்த பொலிஸ் வீரர்களை சத்தியாக்கிரகிகள் ஊடாக இரண்டு வரிசையில் நிற்கும்படி உத்தரவிட்டார். அவர் கட்டளையின் படி பொலிஸார் அப்படியே நின்றனர். அவர்களுக்கு ஊடாக ஊழியர்கள் ஒன்று திரண்டு உள்ளே சென்றனர். மேலும் ஊழியர்களை உள்ளே செல்லாது தடுக்க தீர்மானித்த தொண்டர்கள் வாசலுக்குக் குறுக்கே நீட்டி நிமிர்ந்துபடுத்தனர். பொலிஸ் அதிபர் அவர்களை இழுத்து எறியும் படி கூறினார். காலில் பிடித்து தரையை வென்று இழுத்தெறிந்தனர். வேறு சிலரை கால்களிலும் கைகளிலும் பிடித்துத் தூக்கிச் சென்று வீதியில் கற்களின் மீது தூக்கி எறிந்தனர். இன்னும் சிலரை தூக்கிச் சென்று, மதிற் சுவருக்கு எதிராக எறிந்து அடித்தனர் போராளிகள் உடலெங்கும் உராய்வுகள், காயங்கள், வீக்கங்கள். அவர்கள் மீண்டும் எழுந்தோடி வந்து குறுக்கே படுத்துக்கொண்டனர். இதில் சிலாபத்திலிருந்து வந்திருந்த பிரான்சிஸ் பெரேரா ஐம்பது தடவை தூக்கியெறியப்பட்டார். அப்படியிருந்தும் தைரியத்தோடு போராடினார். இதைக் கண்டு பொறுக்கமுடியாமல் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் உணர்ச்சிவசப்பட்டு, தாமும் குறுக்கே வந்து கிடந்தனர். இது பொலிஸாரை அதிர்ச்சிக்குள்ளாகியது.

பழைய பூங்கா வீதியின் நுழைவாயிலிலும் போராளிகள் இருந்தனர். பத்து மணியிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் சிறீகாந்தா பொலிஸ் ஜீப் வண்டியில் புறப்பட்டு வந்தார். பொலிஸாரும் சேர்ந்தே வந்தனர். உடனே போராளிகள் குப்புறப் படுத்துக் கொண்டனர். ஜீப் வந்தது. யாரும் அசையவில்லை முன்சில்லு அவர்கள் மேல் ஏறியவுடன், ஜீப் நின்றது. போராளிகளின் உறுதியையும் அஞ்சாமையை யும் கண்டு பொறுமை இழந்தார். அவர்களை அடித்து விரட்டும் படி பொலிஸாருக்கு கட்டளை இடப்பட்டது. பொலிஸார் குணடாந்தடிகளால் சுழற்றிக் கொணடு அந்த அகிம்சைப் போராளிகள் மீது பாய்ந்தனர். குண்டாந்தடிகளும், பூட்ஸ் கால்களும் அறப் போராளிகளை பதம் பார்த்தது. அவலக் குரல் வானை முட்டியது. இந்தக் கோரக் காட்சியைக் கண்ட கச்சேரி வாசலில் நின்ற தலைவர்கள் ஓடி வந்து இதில் கலந்து கொண்டனர். அவர்களில் முக்கியமானவர் டாக்டர் நாகநாதன். பொலிஸ் ஒருவன் டாக்டரை குண்டாந்தடியால் அடித்தான். அவரை மோதிய குண்டாந்தடி இரண்டாகத் தெறித்தது. முறிந்து விழுந்த குண்டாந் தடியின் ஒரு பகுதியை எடுத்த டாக்டர், அவனை ஏளனமாகப் பார்த்தார். இது மறப்போர் அல்ல அறப்போர் என்பதை அதல் வெளிப்படுத்தினார். இன்னொரு இளைஞனுக்கு குண்டாந்தடியை தூக்கியபோது தலையைப் பாது காக்க கையை உயர்த்தினான். அடிகையில் விழ சடக்கென்ற ஓசையுடன் அது ஒடிந்தது. காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஒடிந்த அதேகரம் இன்றும் ஒடிக்கப்பட்டது. அடுத்த அடி தலையில் - தலை பிளந்தது தரையில் வீழ்ந்தான். பொலிஸாரின் ஆத்திரம் தீரவில்லை. பூட்ஸ் பாதத்தினால் உழக்கினார்கள். அடி வயிற்றில் ஒரு உதை, விலா எலும்பில் மறு உதை, விலா எலும்பொன்று முறிந்தது. பல உதைகளால் நினைவு மயங்கியது.

அறவழியிலின்று வழுவாமல் போராடிக் கொண்டிருந்த போராளிகளுககு பொலிஸார் செய்யும் இந்தக் கொடுமைகளை பார்வையாளராக நின்று கவனித்துக் கொண்டிருந்த பொது மக்கள் பொறுமையிழந்து, பொலிஸாரை நோக்கி கல்மழை பொழிந்தனர். நிராயுத பாணிகளாக நின்ற அறப்போராளிகள் செயலிழக்கும் அளவிற்கு தாக்கிய பொலிஸார், அவர்களை இழுத்தெறிய அவர்கள் சிந்திய இரத்த வெள்ளத்தில் மிதித்துக் கொண்டு அரசாங்க அதிபர் ஜீப் சென்றது. ஜீப் வண்டியை நோக்கி கற்கள் பறந்தன. ஜீப் க்ண்ணாடி நொருங்கியது. பொது மக்களின் தாக்கு தல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத பொலிஸாரும் பொது மக்களை நோக்கி கற்களை வீசினர். சாக்குகளில் கற்களும் கொணடு வந்திருந்தனர்.

அகிம்சை வழியில் நின்று தம் உரிமைகளைக் கேட்ட தமிழர்கள் பட்ட துன்பம் இப்பொழுது ஒவ்வொருவர் கண்களிலும் காட்சியாக விரிந்திருக்கும். வேதனைச் சுவடுகள் இவ்வளவும் இல்லை. சத்தியாக்கிர ஆரம்பத்தில் பழைய பூங்கா நுழைவாயிலில் சுமார் இருபத்தைந்து பேர் மட்டுமே இருந்திருந்தனர். சற்று நேரத்தின் பின் 500 இற்கும் அதிகமானோர் இருந்தனர். பொது மக்கள் கொண்ட உணர்ச்சி பூர்வமான வேகம் பொலிஸார் இழைத்த கொடுமையிலும் எவரினதும் தூண்டுதல் இல்லாமல் அவர்களையும் பஙகாளி ஆக்கியது. அலுவலக நேரம் முடியும் வரை யாரும் அசையவில்லை. படுகாயமுற்றோர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களைத் தந்தை செல்வநாயகம் பார்வையிடச் சென்றார். அப் போது அங்கே காயமுற்றுப் படுத்திருந்த அறப்போராளிகள் கூறினார்கள்.

இனிவரும் சமுதாயம் எங்களைப் போல் அறப்போராளிகளாக நின்று அடி வாங்காது, ஆயுதம் தூக்கி அவர்களை ஓடவைப்பார்கள இது உறுதியான உண்மை. அறம் வெல்லாமல் ஆயுதத்தினாலே வென்று நாடு மீட்பார்கள்.

அன்று அகிம்சைவழியில் நின்று போராடி, தோற்றுப் போன தமிழ் தந்தையர்கள் வயது முதிர்ந்த நிலையில் இருந்து கொண்டு கூறிக் கொள்ளும் வார்த்தை, இன்று ஆயுதத்தை தூக்கிக் கொடுத்து, அவர்களை நல்ல வழியில் நடத்த, எமது போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கும் வேலுப்பிள்ளை பிரபாகரன் போல் அன்று எங்களை வழிநடத்த ஒரு தலைவனில்லையே. 'அன்று இளைஞர்களாக இருந்ததற்கு இன்று அழுகின்றோம்.' உண்மை அன்று அகிம்சை வழியில் நின்று மரணித்துப்போன அவர்கள், மரணம் சாதத்தது என்ன? இன்று ஆயுததததை தூக்கி தம்மையே ஆயுதமாக்கி வீரமரணத்தை அணைத்துக் கொண்ட அவர்கள், சர்வதேசத்தையே தம் தமிழ் தலைவனைத் தேடி வரவைத்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தை மேடையில் சமநிலையில் புலிகளும் அரசாங்கமும்.

தொகுப்பு - செல்வி பத்மநாதன்

# சமாதான காலத்திலும் தமிழ் மக்களுக்கு எந்த வித சுபீட்சமும் ஏற்படவில்லை!

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை தெரிவிப்பு



(வடமராட்சி)

யுத்தம் நடைபெறும் காலங்கள் போல் இந்தச் சமாதான காலத்திலும் மாவீரர் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

இந்த இரண்டரை வருட சமாதான காலத்தில் தமிழ் மக்களுக்கு எந்த சுபீட்சமும் ஏற்படவில்லை. நாங்கள் படையினர் மீது எந்தத் தாக்குதல்களையும் நடாத்த முடியாது. ஆனால், அவர்கள் எங்களைத் தாக்கலாம். எங்களுடைய வணிகக் கப்பல்களைத் தாக்கலாம். நாங்கள் திருப்பித் தாக்குதல் நடத்தமுடியாது.

அவர்கள் ஆயுதங்கள் கொண்டு வரலாம். ஆனால் நாங்கள் கொண்டு வரமுடியாது. இதுதான் சமாதான ஒப்பந்தம் என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக தங்களது உயிர்களை இந்த தேச வீடுதலைக்காக அர்ப்பணித்த மாவீரர்களின் பெற்றோர்கள் என்றுமே போற்றப்பட வேண்டியவர்கள்.

நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சுதந்திரம் பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்ட சுதந்திரம் அல்ல. எமது பலத்தால் அடித்துப் பெறப்பட்ட சுதந்திரம். 17,800 மாவீரர்கள் சிந்திய குருதியினால் பெறப்பட்ட சுதந்திரம்.

இன்று சந்திரிகாவின் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, ரணிலின் எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி - இந்த இரண்டரை வருட சமாதான காலத்தில் இராணுவ சமபலத்தில் இருந்து உயர்வு பெறுவதற்கான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், யுத்தநிறுத்தத்தை செம்மையாகக் கடைப்பிடிப்பதற்கும், அரசு - புலிகள் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கும் நோர்வேத் தரப்பினர் தரகராகத் தொழிற்பட்டு வருகின்றனர்.

ஆனால், விடுதலைப் புலிகளை தடை செய்த நாடுகளான இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை ஏன் எமது பிரச்சினைக்குக் கருத்துச் சொல்லவேண்டும்.

இன்று முழு உலகமும் போற்றும் யாசிர் அரபாத்துக்குச் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தவர்கள் நோர்வேத் தரகர்கள் ஆவர்.

பலஸ்தீனத்தை அங்கீகரித்த இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் யாசிர் அரபாத் கடந்த மூன்று ஆண்டுகளாக ரமழா நகரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது அவருக்காக ஏன் குரல் கொடுக்கவில்லை? ஏனெனில் அவர்களுக்கென்று ஒரு தளம் இருக்கவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் இன்று வடக்கு-கிழக்கில் 70 வீதமான பகுதிகள் எமது கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன. நாம் இன்று சகல விதமான இராணுவக் கட்டமைப்புக்களையும் கொண்ட ஒரு மரபுவழிப் படையை வைத்திருக்கின்றோம்.

1987 ஆம் ஆண்டு டெல்கிக்கு எமது தலைவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் அழைக்கப்பட்டு எமது தலைவரின் ஒப்புதல் இல்லாமலேயே கைச்சாத்திடப்பட்டதே ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தமாகும்.

அப்போது விடுதலைப் புலிகள் ஓர் கெரில்லா அமைப்பாகும். ஆனால், இன்று மாவீரர்களின் தியாகத்தால் பலம் பொருந்திய ஓர் மரபுவழி இராணுவமாக மாறியுள்ளனர்.

1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்துத் தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓடச் செய்தவர்கள் சிவப்புச் சட்டைக்கார ஜே.வி.பியினர்.

ஆனால், இன்று உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்வதற்கு முனைப்புக்காட்டி வருகின்றனர். அத்துடன் தென்னிலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் ஒற்றுமையாக உள்ளனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமாயின் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும். தற்போதுள்ள இராணுவச் சமநிலையை மோசமானதாகப் பாதிக்கும். தமிழர்களின் விடுதலையைச் சிதைத்து விடும்.

இந்தியாவைப் பொறுத்தவரை எமது பிரச்சினையில் நடுநிலை வகிக்குமாறு ஆரம்பகாலந்தொட்டு நாம் கூறிவருகின்றோம்.

இன்று நோர்வேத் தரகர்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டது சமாதானமாயின், இந்தச் சமாதான காலத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்த பொருளாதார நிபுணர்கள் வரவேண்டிய இந்தக் காலத்தில், ஏன் இந்திய இராணுவ நிபுணர்களான சதீஸ் நம்பியார் முதல் அருண் பிரகாஸ் வரையும், அமெரிக்க இராணுவக் கடற்படைத் தளபதிகள் வருகை தந்தது மாத்திரமல்லாது குடா நாட்டின் முன்னரங்க இராணுவ நிலையான முகமாலையையும் ஏன் பார்வையிடவேண்டும்?

சரக்குக் கப்பல்கள் வரவேண்டிய இந்தக் காலப்பகுதியில் பல ஆயுதக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து செல்கின்றன.

அண்மையில் பத்திரிகைகள் வாயிலாகவும் குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலும் தலைவருக்கும் எனக்கும் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாகவும், நான் வெளிநாடு சென்றது - மூத்த உறுப்பினர்களைச் சந்தித்து இந்த முரண்பாடுகளைச் சீர்செய்வதற்காகவே எனவும் செய்திகள் வெளியாகின.

இது அரசினால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் ஓர் உளவியல் போராகும். சமாதான காலங்களில் இப்படியான உளவியல் போர்களை அரசு மேற்கொள்வது வழக்கம்.

1988 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் மணலாறுப் பகுதியில் எமது தலைவர் மரணித்து விட்டதாக ஓர் உளவியல் போரை நடாத்தியது உங்களுக்கு ஞாபகமிருக்கும்.

மேலும் அண்மைக்காலங்களாக இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டுவந்த நிழல் யுத்தங்கள் எல்லாம் தோல்வி அடைந்ததன் காரணமாகவே தற்போது உளவியல் போரில் அரசு தீவிரமாக ஈடுபட முனைகிறது.

இந்த உளவியல் போரை முறியடிப்பதற்கு இப்படிப்பட்ட வதந்திகளை மக்கள் கருத்தில் கொள்ளக் கூடாது.

உண்மையில் எனது உடலின் நிலைமை காரணமாகவே நான் சிகிச்சை பெற வெளிநாடு சென்றேன், சிகிச்சை பெற்றேன், தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றேன்.

எமது விடுதலைப் போராட்டத்தில் கடற்படைய்யை வளப்படுத்தும் முகமாகத் தலைவர் 300 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளார். இந்த நிதி புலம் பெயர்ந்த எமது உறவுகளிடம் இருந்து பெறப்படவுள்ளது.

இந்தத் தகவல் இலங்கை அரச படைகளுக்கு ஒரு குழப்பநிலையைத் தோற்றுவித்துள்ளது. இதனால்தான் இப்படிப்பட்ட உளவியல் போரை மேற்கொண்டுவருகின்றது.

இன்று சிங்கள அரசு மட்டக்களப்பில் மாத்திரமல்ல, வடக்கிலும் தனது கோர முகத்தைக் காட்டியுள்ளது.

வல்வெட்டித்துறையில் மாவீரர் நிகழ்வுகளைக் குழப்பும் நோக்கில் அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டது ஒருவகையான உளவியல் போராகும்.

கருணா என்ற நச்சுவிதை இந்தச் சமாதான காலத்தில் உளவியல் போரை நடாத்துவதற்கு அரசுக்கு உதவியாகவுள்ளது.

சந்திரிகா எங்களைப் பேச்சுவார்த்தைக்கு வரமுடியுமா இல்லையா என இம்மாத முடிவுக்குள் அறிவிக்குமாறு காலக்கெடு விதித்துள்ளார். நாம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை அடிப்படையில் பேசத்தயார்.

நாம் இறுதியாக நோர்வே தரப்பினருடாக அரசாங்கத்திலுள்ள சகல கட்சிகளும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டம் அடிப்படையில் பேசுவதற்கு தயார் என கூட்டாக அறிவிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளோம்.

அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினர் எதிர்த்து நின்றனர்.

மேலும் சமாதான காலகட்டத்தில் இராணுவச் சமநிலையைத் தகர்த்தெறிவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

நாம் பலமாக இருப்பது கண்டு அரசு அதிசயிக்கிறது. எமது பலம் என்பது இந்த மாவீரர்களின் தியாகத்தால் பெறப்பட்ட மரபுவழியான இராணுவத்திலேயே தங்கியுள்ளது.

எமது தேச விடுதலை - எமது தலைவரின் காலத்திலேயே பெறப்படவேண்டும். இதற்கு எமது தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவது மக்களாகிய உங்களிடமே தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் குணவிழி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் பெற்றோரான மனோன் மணி முத்துக்குமார் ஏற்றினார்.

ஈகச்சுடரை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஏற்றி வைத்தார். மாவீரர் திருவுருவப் படங்களுக்கு கோட்டக்கல்வி அதிகாரி பா.குருநாதன் மலர்மாலை அணிவித்தார். தமிழீழ தேசியக் கொடியைக் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றினார். கடற்புலிகளினதும், கடற் கரும்புலிகளினதும் படையணிகள் அணிவகுப்புக்கள் இடம்பெற்றன. (122)

# தமிழீழ மாவீரர் நாள்

## நவம்பர்-27 இரவு நிகழ்வுகள்

தேசியத் தலைவரின் மாவீரர் நாள் நினைவுரை.

இன்று மாலை 6.05 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்கக்கூடியதாக தேசியத் தலைவரின் மாவீரர் நினைவுரை நிகழ்வு இடம்பெறும்.

**நினைவொலி எழுப்புதல் (6.05 மணிக்கு)**

தேசியத் தலைவரின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன், உடனடியாக 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டு இடங்களிலும், ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பப்படும். உயிர்காப்புப் பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு, அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி)**

மாவீர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன், 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்த நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் எழுந்து நின்று, மாவீரர்களை நினைவில் நிறுத்தி, அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச்சுடர் ஏற்றல் (6.07 மணி)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும்.

மாவீரர்களின் பெற்றோர்கள், அவரவர் சுடரேற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் மாலை 5.45 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும், மேற்கொள்ளப் பட்டிருக்கும்.

மாவீரர் துயிலுமில்லங்களில் உள்ள மாவீரர் கல்ல றைகள், நினைவுக்கற்களுக்கு முன்னால், மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், அதேநேரம் மாவீரர் துயிலு மில்லங்களில் இடம்பெயர்ந்த மாவீரர் பெற்றோர்கள், அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லகளுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்கள், பொது இடங்கள், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில், உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றுவர். ஈகச்சுடர் ஏற்றும் போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும். (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.)

**- தமிழீழ மாவீரர் பணிமனை.**

# எழுந்திடுவீர் வீரரே!

எழுந்திடு வீர் வீரரே கல்லறை நின்றெம்
இதயத்தில் எழுகின்ற உதயத்தையே தூண்டி
(எழு)

அழுந்திருள் ஒழித்தே செந்தமிழரின் நிலையோங்க
ஆதார எண்ணத்தின் மீதேறிப் பொழிந்திட
(எழு)

விண்முகில் கனிந்தது விடிந்ததெம் பொழுது
வீங்கிருள் அகன்றது வெருண்டது சிங்கம்
தண்முகம் அருணத் தழல்முக மானது
தடங்களில் தொடர்ந் தனர் இளையவர் ஒன்றாய்
(எழு)

மண்ணதும் புதுப்பசும் பொன்னிற மாகிட
மங்கலச் செங்கதிர் மலர்ந்தது வானில்
எம்முகம் காத்துமே இனமதைப் போற்றவும்
எழுந்தது இத்தினம் இளநிலை தொடரவே
(எழு)

ஆர்வத் தினால் மனம் தேடுதுன் சிறப்பை
அன்பு ஸ்வம்பாடு துன்மாண்டதன் பொருளை
கார்த்திகை திங்களில் களிக்குமே என்றும்
கலங்கிடாது உறுதி உரமடையும் இனமே
(எழு)

சூரிய சோதிசேர் தாரகை போலும்
சுடரினில் ஒன்றாக ஒளிர்ந்தும் நிற்பீர்
பாரெல் லாம்உம் புகழ்பாடிட வருவார்
பார்த்தி டுவீர் தமிழீ ழம்மலர்வது அதனை.
(எழு)

- நா.வரதராசா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.
திருக்குறள்

# நமது நோக்கு

## கொள்கைப் பிரகடனமாகும் மாவீரர்நாள் உரை

தமிழ் மக்களின் விடிவுக்காக உயிர் நீத்த மாவீரர்கள் - தமிழர் தாயகத்தில் மட்டுமன்றி, தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் நினைவுகூரப்படுகின்றனர்.

தமிழ் மக்கள் - சிங்கள அரசின் அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டு, பொறுமை இழந்த நிலையில்தான், ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த ஆயுதப்போராட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் தமது பலத்தை உலகறியச் செய்தனர்.

இந்தப் பலம்தான் இன்று சமாதான சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், இந்தச் சமாதான சூழல் ஆயிரமாயிரமாய் இந்த மண்ணில் வீழ்ந்த மாவீரர்களின் உதிரத்தினால் தான் உருவானதென்பது எவராலும் மறுக்கப்படமுடியாது.

தமிழ் மக்களால் பூசித்துப் போற்றப்பட வேண்டிய மாவீரர்களை நினைவு கூரும் இந்தத் தினத்தில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தினவுரையில் தமிழர் தரப்பின் கொள்கையுரையாக எதிர்பார்க்கப்படுகி றது.

முன்னைய காலங்களில் இருந்ததைவிடவும், வித்தியாசமான தொரு சூழலில் இந்தமுறை - மாவீரர்தின உரை பலத்த எதிர்பார்ப்பை ஏற்படு-த்தியுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது மாவீரர் தின உரையில் - சமாதானத்திற்கான கதவுகள் திறந்துவைத்துக் கொண்டிருப்பதாக சிங்கள அரசுக்கு அழைப்புவிடுத்து - நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானத்துக்குத் தேசியத் தலைவர் பிரபாகரன் வலுச்சேர்த்திருந்தார்.

அதன் பின்னர் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டு கடந்த 33 மாதகாலமாக போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருகின்றது. இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் - படைத்தரப்பின் அண்மைக் காலச் சம்பவங்கள் நடந்தேறிவருகின்றன. பொதுமக்கள் மீதான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவரும் அரச படையின் நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியிலும், புலிகள் மத்தியிலும்சரி பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது:

அண்மையில் வல்வெட்டித்துறை - மீசாலை - மன்னார்- வவுனியா ஆகிய இடங்களில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டதால், இரண்டு உயிர்களும் சுமார் 30 பேர் வரை காயமடையவும் நேரிட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு - முன்பாகவே தமிழ்மக்கள் தாக்கப்படும் அளவுக்கு படைத்தரப்பின் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் தான் இந்தவருட மாவீரர் தின உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகிறது.

பொதுமக்கள் மீதான அடாவடித்தனத்தைக் கட்ட விழ்த்துவிட்டு - அந்தப் பழியைப் புலிகள் மீது போட்டுவிடும் முயற்சிகளிலும் அரச படைகள் ஈடுபட்டிருக்கின்றன. அரச படைகளின் அட்டூழியப் போக்கினால் புலிகள் தரப்பு அடைந்திருக்கும் சீற்றத்தை ஏற்கனவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அனுப்பியிருக்கும் கடிதத்தின்மூலம் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இனிமேலும் புலிகளும், தமிழ் மக்களும் - இத்தகைய அடாவடித்தனமான தாக்குதல்களைப் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்திருப்பது - இன்றைய மாவீரர் நாள் உரையின் எதிர்பார்ப்பைப் மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.


சமாதானத்துக்காகப் புலிகள் கடந்த 3 வருடங்களாக பாடுபட்டு வந்தபோதும், அதனை அரச தரப்பு உரியவகையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இது புலிகளை மிகுந்த ஏமாற்றத்துக்குட்படுத்தியிருப்பதுடன் - இனிமேலும், யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தையென்று இழுபட்டுக்கொண்டு இருப்பது சரியானதா என்ற கேள்வியை அரசாங்கம் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது.

சமாதான காலத்தில் போராளிகள் தொடர்ந்துகொல்லப்படுவதும், பொதுமக்கள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து சமாதானத்துக்கான நல்ல அறிகுறியை - தமிழ் மக்களின் உரிமைக்காகத் தமது உயிர்களைக் கொடுத்த மாவீரர்களை நினைவு கூருவதற்காக முற்படும் மக்களைத் தாக்கி விரட்டும் அரச படைத்தரப்பினர்- கண்ணியமின்றியும், கட்டுப்பாடின்றியும் நடந்துகொள்வது தமிழ்மக்களின் தாயகப் பற்றை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்த மண்ணையும், மக்களையும் காப்பாற்றுவதற்காக 18 ஆயிரம் மாவீரர்களைத் தியாகம் செய்துநிற்கும் தமிழ் மக்கள் - அவர்களைச் சுதந்திரமாக நினைவுகூர முடியாதவர்களாக இன்னலுறும் நிலை ஏற்படுமானால் - இந்தச் சமாதான காலத்துக்கு எந்த அர்த்தமும் இருக்காது.

எனவேதான் - தமிழ் மக்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ற செயலை வெளிப்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே, தேசியத் தலைவரின் இன்றை மாவீரர் நாள் உரை எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடும் நடப்பும்



# அரச ஊழியர்களுக்கான சம்பளத் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும், முப்படையினருக்கும் 2005 ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி அரசாங்க அலுவலர்களுக்கு சம்பள முற்பணம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், மே, ஜூன். ஓகஸ்ட், ஒக்ரோப்ர், நவம்பர் மாதங்களில் 10 ஆம் திகதியும், ஜூலை மாதம் 8 ஆம் திகதியும், செப்ரெம்பர், டிசம்பர் மாதங்களில் 09 ஆம் திகதியும் வழங்கப்படும். சம்பளம் ஜனவரி, பெப்ரவரி, ஓகஸ்ட், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் 25 ஆம் திகதியும், மார்ச், ஜூன் மாதங்களில் 24 ஆம் திகதியும், ஜூலை மாதம் 22 ஆம் திகதியும், செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதியும், டிசம்பர் மாதம் 20 ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியும் வழங்கப்படும்.

அதேநேரம் முப்படையைச் சார்ந்தவர்களுக்கு சம்பள முற்பணம், ஏனைய அரச அலுவலர்களுக்கு வழங்கும் அதே திகதியிலும், சம்பளம் ஜனவரி, மே, ஜூலை, டிசம்பர் ஆகிய மாதங்களில் 20 ஆம் திகதியும். பெப்ரவரி, மார்ச், ஜூன் ஆகிய மாதங்களில் 22 ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதியும், செப்ரெம்பர், ஒக்ரோபர், ஆகிய மாதங்களில் 21 ஆம் திகதியும், ஓகஸ்ட், நவம்பர் ஆகிய மாதங்களில் 23 ஆம் திகதியும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுளது. (24)

### உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு

# 25 இலட்சம் ரூபா ஆயுள் காப்புறுதி வழங்க வேண்டுமெனக் கோரிக்கை

(கொழும்பு)

உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுள் காப்புறுதி வழங்கும்படி உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சங்கம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையைத் தொடர்ந்து நீதிபதிகளின் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்த ஆலோசனை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஆயுள் காப்புறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் செனவிரட்ண உறுதியளித்திருப்பதாக உயர்நீதிமன்ற நீதிபதிகளின் சங்கத் செயலாளர் ரோகினி பெரேரா தெரிவித்தார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 25 இலட்சத்துக்கான ஆயுள் காப்புறுதி வ்ழங்குவதுடன் மற்றைய நீதிபதிகளுக்கும், அதுபோன்ற காப்புறுதியையும் வழங்குமாறு இந்தச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (தே)

## பயிற்சிப் பட்டறை பிற்போடப்பட்டது

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவை அலுவலர்களுக்கான பயிற்சிப்பட்டறை பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 30ஆம்,1ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இப்பயிற்சி நெறி தவிர்க்கமுடியாத காரணத்தால், டிசம்பர் மாதம் 3, 4 ஆம் திகதிகளில் திருகோணமலை உப்புவெளியில் நடைபெறும்.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சனி இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

## உதயசூரியன் கிராம மக்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்துள்ளனர்

யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் மழை காரணமாகத் தென்மராட்சியிலுள்ள உதயசூரியன் கிராமமக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

உதயசூரியன் கிராமத்தில் குடியேறி வாழ்வதற்கு உகந்த மேட்டுநிலப்பரப்பு - தென்மராட்சி இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருப்பதால், அங்கு மக்கள் குடியேறத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த பகுதிகளிலேயே மக்கள் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்துவந்தனர். இந்த மழை காரணமாக மக்கள் தற்காலிக கொட்டகைக்குள் மழைநீர் புகுந்துள்ளதனால் அங்கு குடியிருந்த 25 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் தொடர்ந்து இடம்பெயராது வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளின்றிப் பல இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(17)

## மிதிவெடி அபாய குறியீடுகள் விஷமிகளால் அகற்றல்

வலி-கிழக்கு பிரதேசங்களில் நாட்டப்பட்டுள்ள மிதிவெடி அபாயக் குறியீடுகள், விஷமிகளால் அகற்றப்படுகிறது.

தொண்டர்களால் நாட்டப்படும் எல்லைக் கம்பங்கள், குறியீட்டு அட்டைகள், பதாகைகள் விஷமிகளால் இரவில் அகற்றப்படுவதால், மிதிவெடி அகற்றும் தொண்டர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளைக் கைவிட்டு, தொண்டர்களுக்கு பொதுமக்கள் ஒத்தாசை வழங்கும் பட்சத்தில் விரைவாகப் பல பகுதிகள் மிதிவெடிகள் அகற்றப்பட்டு, பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்க முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (90)

## மழைநீர் தேக்கத்தால் மாணவர்கள் சிரமம்

யாழ்.கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை வீதியில் மழைநீர் தேங்கி நிற்பதால், அந்தப் பாடசாலை பாதையூடாகப் போக்கு வரத்துச் செய்யும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குன்றும் குழியும், சகதியுமாகக் காணப்படும், இந்த வீதியில், தற்போது பெய்துவரும் மழையால் அசுத்த நீர் தேங்கி நிற்கிறது. இதனால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும், ஆசிரியர்களும் சப்பாத்துடன் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது. (116)


கல்லறை வாழ்விலும்
கனவென உயிர்த்து
மெல்லச் சிரிக்க.. மேதினி சிலிர்க்கும்
மஞ்சளும் சிவப்பும்
மலர்களாய் சொரிந்து
கார்த்திகைச் செடிகள்
கவிதைகள் பாடும்
துயிலுமில்லம் ஒளியில் மிதக்கும்
தூக்கமற்று ஓர் இரவு கழியும்
தாயகக் கனவுடன்துயில்பவர்க்காக
தாயகமே இன்று விழித்திருக்கும்
துயிலுமில்லப் பாடல் வரிகளுள்
இதயம் நனைய இமைகள் துளிர்க்கும்
நேற்றைய வீரர் நெஞ்சின் சுமைகளை
இன்றைய நாங்கள் தோளில் ஏற்று
நாளை சுதந்திர பாடலை எழுத
மறுநாள் புலரும், தேசம் விடியும் .
தமிழீழ வைப்பகம்
தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

# தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவின்போது...


பொதுச்சுடரேற்றும் ஜெயராஜ் – சலீம்


அடிக்கல் நாட்டும் தமிழ்ச்செல்வன் – பொன்தியாகம்


தேசியத் தலைவர் வழங்கிய நிதியை கையளிக்கிறார் தமிழ்ச்செல்வன்


அருட்திரு ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார்.


சு.ப.தமிழ்ச்செல்வன்


டி.எம்.சிவராம்


மு.திருநாவுக்கரசு

# இஸ்ரேல் படையினர் தாக்குதல் காஸாவில் 3 பலஸ்தீனர்பலி



காஸாப் பகுதியில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காஸாவில் ஹெப்ரோன் பகுதியில் கிளர்ச்சிவாதிகள் மறைந்திருந்த கட்டடத் தொகுதியை படையினர் சுற்றி வளைத்துத் தாக்குதலை மேற்கொண்டவேளை இரண்டு கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் வானொலி தெரிவித்தது.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் ஹமாஸ் அமைப்பின் உள்ளூர்த் தலைவரான முராட் குவாசம் என்பவராவார்.

இவர்கள் இருவரும் நிசார் ஷேக்கத் என்பவரின் இரண்டு கட்டடங்களில் மறைந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஷேக்கத் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஹமாஸ் அமைப்பிற்கு ஆதரவு தெரிவித்தார் எனத் தெரிவித்து இஸ்ரேல் சிறையில் வைக்கப்பட்டிருந்தார்.

றபா பகுதியில் இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இஸ்ரேல் படையினரின் தாங்கிகள் ஏவிய ஷெல் குண்டுகள் இவருக்கு அருகில் விழுந்து வெடித்ததாலேயே இவர் கொல்லப்பட்டதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்தெதனையும் தெரிவிக்காத இஸ்ரேல் இராணுவம் இந்தப் பகுதியில் எகிப்திலிருந்து ஆயுதங்கள் கடத்தப்படுவதனைத் தடுக்கும் வகையில் படை நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தது.


## 45ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கண்கள் மலர்ந்திட — கண்கள் கலங்கிட

1931 04 21 — 2004 10 15



அமரர் வீரகத்தி சின்னராசா

கடல்வளம் சூழ்ந்த வல்வை நகரிலே பிறந்து
அன்பால் எம்மை அணைத்தவரே!
அறிவில் உயர வைத்தவரே!
ஊர்போற்ற உத்தமராய் வாழ்ந்தவரே – இன்று
வானில் நிலவாகித் தண்ணொளி அளிப்பவரே!
காற்றோடு கலந்து எம் மூச்சாய் இருப்பவரே
எம் ஐயா! நீங்கள் மறைந்து திங்கள் ஒன்றுடன்

பதினைந்து தினங்களும் கழிந்ததையா
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையவில்லை
எம் அன்னை மறைந்து எட்டு ஆண்டுகள் கழிந்து
அவர் நினைவோ எம் உள்ளம் விட்டு ஆறவில்லை
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
இருவர் நினைவும் எம்மைவிட்டு மறையாது!
என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நாளை 28.11.2004 ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மானாங்கானை,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.
தகவல் : சி.செயகுலசிங்கம்
(செயத்தான்)

(C/3409)


# மெக்சிக்கோ பொலிஸார் இருவர் பொதுமக்களால் உயிருடன் எரிப்பு


(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நாட்டின் பொலிஸார் இருவர் அந்நாட்டு பொதுமக்களால் உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர்.

மற்றுமொரு பொலிஸார் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் ஏனைய பொலிஸாரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மெக்சிக்கோவில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து இரு குழந்தைகள் கடத்திச் செல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் பின்னர் இப்பாடசாலைக்கு சிவில் உடையில் சென்ற பொலிஸாரை கடத்தற்காரர்கள் என எண்ணிய பொதுமக்கள் அவர்களை பொல்லுகள், தடிகள் போன்றவற்றால் தாக்கியதுடன் கால்களாலும் உதைத்துள்ளனர்.

குறிப்பிட்ட பொலிஸார் தம்மை இனங்காட்டியபோதும் அவர்களை மோசமாகத் தாக்கிய பொதுமக்கள் தீயிட்டு எரித்துள்ளனர்.

மற்றைய பொலிஸார் மூன்று மணிநேரப் போராட்டத்தின் பின்னர் பலத்த காயங்களுடன் காப்பாற்றப்பட்டார். இவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தினை படம் பிடித்த பிரான்ஸ் ஏ.எஸ்.பி. செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் இது போன்றதொரு பைத்தியத்தனமானதும், பரிதாபகரமானதுமான சம்பவத்தினை தனது வாழ்நாளில் காணவில்லை எனத் தெரிவித்தார்.

மெக்சிக்கோ நகரின் வீதிகள் அனைத்தையும் மூடியுள்ள பொலிஸார் குறிப்பிடப்பட்ட சம்பவத்தின் போது செய்தியாளர்களால் பிடிக்கப்பட்ட புகைப்படங்களை ஆதாரமாகக் கொண்டு வீடுவீடாக தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர். இது வரையில் சம்பவத்துடன் தொடர்புடைய 30 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸாரும், 600ற்கும் மேற்பட்ட படையினரும் இணைந்து நகரின் அனைத்து இடங்களிலும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு நேர்மையான விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் மெக்சிக்கோ நகரப் பொலிஸ் அதிகாரி ஜெனரல் றாபேல் மகிடோ தெரிவித்தார்.

## உலக நோக்கு


ஆசியாவில் உயரமான மனிதராக சீனாவைச் சேர்ந்த ஐசிஜுசிகாய் கின்னசில் இடம்பெற்றுள்ளார். இவரது உயரம் 7.98 அடியாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# தமிழ் மக்களால்...

தளபதிகளில் ஒருவரான கண்ணதாசனிடம் ஒப்படைக்கப்பட்டன.

தேசியத் தலைவர் ஆரம்பக் கல்வியைக் கற்ற பாடசாலையான வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் 50 கிலோ எடையுள்ள கப்பல் வடிவிலான கேக்கை, கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசன் வெட்டி மக்களுக்கு வழங்கினார்.

நல்லூர் ஆலய முன்றலில் விசேட பூசைகள் நடைபெற்றதுடன், 50 பானைகளில் பொங்கலும் பொங்கப்பட்டது. வடமராட்சி, தென்மராட்சி, யாழ் நகர், வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளில் இந்து ஆலயங்களில் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள வித்தக விநாயகர் ஆலயம், கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் உட்படப் பல்வேறு ஆலயங்களில் விசேட பூசைகள், அபிஷேக ஆராதனைகள் என்பன இடம்பெற்றன.

புத்தூர் வெரஸ் விளையாட்டுக் கழகத்தினர் விசேட கரப்பந்தாட்டப் போட்டியை நடத்தினர். யாழ். மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சி அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் பார்வைக் குறைபாடுள்ள வறிய மக்களுக்கு கண் சிகிச்சை முகாம் நடத்தி இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றன தேசியத் தலைவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் கேடயங்களை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களிடம் கையளித்தன.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட வீரர்கள் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பு ஒன்று கூடி தமிழீழ தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்ததின வாழ்த்துக் கேடயத்தைச் சுமந்தவாறு பருத்தித்துறை வீதியூடாக ஓடிச்சென்று தலைவரின் வீடு அமைந்துள்ள வல்வெட்டித்துறையில் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மதியம் 3 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 50 பானைகளில் பொது மக்கள் பொங்கி உண்டு மகிழ்ந்தனர். யாழ். மாவட்ட அரசியற்துறைச் செயலகத்திலும், யாழ். மாவட்ட தொழிற் சங்கங்களின் இமையவன் தலைமையில் தலைவரின் பிறந்த தின நிகழ்வும் சிறப்புற நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழத் தேசியத் தலைவரின் ஐம்பதாவது அகவையை முன்னிட்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் அணியினதும், கரும்புலிகள் அணியினதும் விசேட கண்காட்சி அணிவகுப்பு நிகழ்ச்சியொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பித்த இந்த அணி வகுப்பு நிகழ்வு, நகர மத்தி வரையில் நீடித்திருந்தது.

பாண்ட் வாத்தியக் குழுவினர் முன்னே அணி வகுத்துச் செல்ல, கடற்புலிகளின் அணியினரும், கரும்புலிகள் அணியினரும் தொடர்ந்து அணி வகுத்து நகர வீதி வழியே சென்றனர்.

இதேவேளை, நேற்றுக் காலையில் தேசியத் தலைவருக்கு நல்லாசி வேண்டி கிளிநொச்சி நகரில் விசேட பொங்கல் நிகழ்வொன்றும் இடம்பெற்றது.

# இளைஞர் குழு...

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இரண்டு இராணுவத்தினரும் மேலதிக கிசிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இருட்டில் இந்தச் சம்பவம் நடத்தப்பட்டதால் தம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என தம்மால் இனங்காண முடியவில்லை என்று காயமுற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் தெரிவித்ததாகவும் - மற்றைய சிப்பாய் தாக்குதல் நடத்தியவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்திருப்பதாகவும், பலாலி படைத்தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்தனர். (34, 29)

# நுணாவிலில் பொது...

தாக்குதல்களை நடத்தினர்.

அந்த வீதியூடாகச் சென்ற மோட்டார் சைக்கிள்களை வழிமறித்து அடித்து நொருக்கிய படையினர்- கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களை ஏற்றிவந்த அம்புலன்ஸ் வண்டியின் சாரதியை வழிமறித்துத் தாக்கியதுடன், அம்புலன்ஸ் வண்டியையும் தாக்கிச் சேதப்படுத்தினர்.

இதனையடுத்து தொடர்ந்து, தென்மராட்சிப் பகுதியிலிருந்து யாழ். நகரத்தை நோக்கி வந்த வாகனங்கள் மட்டுவில் - புத்தூர் ஊடாக வந்தடைந்தன.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் படையினர் குவிக்கப்பட்டமையால், நேற்றிரவு பெரும் பதற்றம் நிலவியது.

(34, 29)

## இன்று...

நினைவுச்சுடர் ஏற்றப்படும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும், வீடுகள், ஆலயங்கள், பொது நிறுவனங்கள் என சகல இடங்களிலும் மாவீரர்களை நினைவுகூரும் நினைவுச்சுடர் ஏற்றப்படும்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரம், பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, சுவிஸ், பிரிட்டன், நோர்வே, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலும் தமிழீழ தேசியத் தலைவரின் உரையுடன் ஆரம்பமாகி மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.


இதில் சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## இராணுவச்...

நள்ளிரவு வரை திறந்துவைப்பது குறித்து விடுதலைப் புலிகள் இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து இன்றிரவு 11.00 மணிவரை இந்த சோதனைச் சாவடிகள் திறந்திருக்கும் என்பதை விடுதலைப் புலிகள் தரப்பினரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

# ஊடக அறிவியல் கல்லூரிக்கு நேற்று கிளிநொச்சியில் அடிக்கல் நாட்டு விழா!



(கிளிநொச்சி)

தமிழ் ஊடக அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி அறிவியல் நகரில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10 மணியளவில் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை 'ஈழநாதம்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஜெயராஜ், கிழக்கு மாகாண பத்திரிகையாளர் சலீம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

இதன்பின்னர் தலைமையுரையை அருட் திரு. ரூபன் மரியாம்பிள்ளை நிகழ்த்த, தொடக்கவுரையை சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஊடகவியற் கல்லூரிக்கான அடிக் கல்லை மூத்த பத்திரிகையாளர் கோபு, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் நாட்டிவைத்தனர்.

கல்லூரி அமைப்புக்கென தேசியத் தலைவரால் வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபாவை, அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளையிடம் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரைகளை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராம், அரசியல் விமர்சகர் மு. திருநாவுக்கரசு ஆகியோர் ஆற்றினர். பு.சத்தியமூர்த்தியின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிக்கையில் -

தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள ஊடகப் பயங்கரவாதத்தை சிங்கள ஊடகங்களும், அரசாங்கமும் கைவிட வேண்டும்.

தாம் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் மற்றையவர்களைப்போல வாழவேண்டும் என்பதே தமிழ் மக்களுடைய அபிலாஷைகளாக இருக்கின்றன.

இதனை சிங்கள தேசமும், சிங்கள ஊடகங்களும் புரிந்துகொண்டு செயற்பட முன்வரவேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலம், தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்களும் மட்டு மன்றி, சிங்கள தேசமும், சிங்கள மக்களும் கூட நிம்மதியாக வாழமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (94)

# சிங்களக் காடையர்...

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

தமிழீழ மாவீரர் தினத்தின் எழுச்சி நாளின் இரண்டாவது நாளான நேற்று திருமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளால் ஏற்றப்பட்ட தேசியப் கொடியை உடனடியாக இறுக்குமாறுகோரி - திருமலை 4 ஆம் கட்டை அபயபுர எனும் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்களை மறித்த சிங்களக் காடையர்கள் அந்தப் பாதையூடான போக்குவரத்தைத் தடைசெய்தனர்.

அத்துடன் வெளிமாவட்ட துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்ட மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவர்களின் குடும்பங்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டவேளை அதனையும் தடுப்பதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டதாக திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

அபயபுரம் பகுதியில் வீதி மறியலில் ஈடுபட்ட இவர்கள் அங்கிருந்து புறப்பட்டு கலாசார மண்டபத்தில் ஏற்றப்பட்ட தேசியக் கொடியைத் தாம் இறக்கப்போவதாகக் கூறிக்கொண்டுவந்தவேளை -இவர்களைப் பொலிஸ் நிலைய சந்திக்கருகே வழிமறித்த பொலிஸார் அவர்களைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்கவில்லை.

மடத்தடிச் சந்திப் பகுதியில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அப்பகுதிக்குச் சென்ற இவர்கள் தமது சிங்கக் கொடியை உயரமான கம்பமொன்றில் ஏற்றினர். உடனடியாகவே அப்பகுதியில் நின்ற தமிழர்கள் சிங்கக் கொடியைவிட உயரமான கம்பத்தில் சிவப்பு மஞ்சள் கொடியை ஏற்றினர்.

இதனையடுத்து அப்பகுதியில் நின்ற பொலிஸாரும் சிங்களவர்களும் - தமிழ்மக்கள் மீது தாக்குதலை நடத்தினர். இதனையடுத்து இரு பகுதியினருக்கும் இடையே கைகலப்பு இடம்பெற்றது. இதன் பின்னர் அந்தப் பகுதிக்கு வந்த படையினர் வீதிகளில் நின்ற தமிழர்கள்மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தினர்.

அத்துடன் திருமலை சிவன் கோயிலடிப் பகுதியில் தேசியத் தலைவரின் பிறந்த தினத்துக்கு கேக் வெட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் கூடி நின்ற தமிழர்கள்மீதும் படையினரின் மோட்டார் சைக்கிள் அணியினர் - செயின், முட்கம்பி போன்றவற்றால் தாக்குதலை நடத்தியதால் பலர் படுகாயமடைந்தனர்.

இதன்பின்னர் உடனடியாக ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாக ஒலிபெருக்கிமூலம் அறிவித்த படையினர் அப்பகுதிகளில் அமைக்கப்பட்ட மாவீரர் பதாதைகளில் நான்கை எண்ணை ஊற்றி தீயிட்டதுடன், கட்டப்பட்ட சிவப்பு மஞ்சள் கொடியையும் அறுத்து எரித்துள்ளனர்.

படையினர் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்திருயிருந்தபோதும் - தேசியத் தலைவரின் பிறந்த தினத்திற்காக அமைக்கப்பட்ட கேக் வெட்டப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக உடனடியாகவே கண்காணிப்புக்குக் குழுவுக்கு முறையிட்டதுடன், படையினரின் இந்தச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும், இல்லையெனில் விபரீதமான விளைவுகள் ஏற்படும் எனப் புலிகள் தெரிவித்த பின்னர் தற்போது நிலைமை ஓரளவு சுமுக நிலையில் உள்ளது.

இந்தத் தாக்குதலை ஜே.வி.பியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த ஜெயசேகர தலைமையிலான குழுவினரும், அபயபுரத்திலுள்ள பௌத்த விகாரையின் பிக்குவுமே முன்னின்று நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை கந்தளாய் பகுதியிலிருந்து சுமார் 300 பேரடங்கிய குழுவினருடன் திருமலை நகரப் பகுதிக்கு வாகனங்களில் வந்திறங்கிய ஜே.வி.பியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த ஜெயசேகர குழுவினர் நேற்று மாலை 2.30 மணியளவில் திருமலை நகரில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள சந்தியூடாக உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு செல்ல முற்பட்டவேளை இவர்களைப் பொலிஸார் தடுத்துநிறுத்தினர்.

இதனையடுத்து இந்தக் குழுவினருக்கும் பொலிஸாருக்கும் ஏற்பட்ட மோதலையடுத்து பொலிஸார் அந்தக் குழுவினர்மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். இதனையடுத்து பொலிஸாருக்கும் படையினருக்கும் முன்னிலையில் பொலிஸ் நிலையச் சந்தியில் வைத்து நோர்வே நாட்டின் தேசியக் கொடியினையும், மாவீரர் தினத்தையொட்டி கட்டப்பட்டிருந்த மஞ்சள் சிவப்பு கொடியையும் ஒன்றாகச் சேர்த்து தீயிட்டு எரித்தனர்.

இதன்பின்னர் படையினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டபின்னர் இவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (04,10)

## மரண அறிவித்தல்

### அருள்நாதன் மொறின் நந்தினி

**பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்நாதன் மொறின் நந்தினி 26.11.2004 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.**

**அன்னார் றொபேட் சிங்கம் மரியநாயகி தம்பதிகளின் அன்பு மகளும் சாமிநாதன் அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் அருள்நாதனின் அன்பு மனைவியும் ஜனாத்தனியின் அன்புத் தாயாரும், நந்தன் (கனடா), தர்சினி (பெரிய விளான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஞ்சலஸ் (நெதர்லாந்து), அருண்சீலி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.**

**அன்னாரின் நல்லடக்கம் 28.11.2004 ஞாயிறு காலை 10 மணிக்கு பெரிய விளான் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பெரிய விளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

***யுவானியார் கோவிலடி,***
***பெரியவிளான்,***
***இளவாலை***

தகவல்:
அருள்நாதன் (கணவர்)
(போராளி தம்பி)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.